


அமரர்

# திருமிகு. செல்லத்துரை நடேசபிள்ளை

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நடேச தீபம்

26.10.2019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



யாழ்ப்பாணம்

அல்லைப்பிட்டி அம்பதிவாசகரும் உயர்தவச் சைவவேளாண்குல திலகரும்

இலங்கை நாயகமா முதலியார் வழிவழி வந்தவருமாகிய உடையார்

திரு. திருமதி. செல்லத்துரை – சொர்ணம்மா தம்பதிகளின்

தவப்புதல்வனும், பிரபல வர்த்தகரும்

இனிச்ச புளியடி முருகன் ஆலய தர்மகர்த்தாவுமாகிய

## அமரர்

# திருமிகு. செல்லத்துரை நடேசபிள்ளை

## அவர்களின்

சிவபதப்பேறு குறித்த

# நடேச தீபம்

## 26.10.2019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

பார்போற்றும் பெருமகனாக
உற்றதோர் உடன்பிறப்பாய்
உரிமைமிகு துணைவனாய்
பாசம்மிகு தந்தையாக பண்பான மாமாவாக
பரிவுமிகு பேரனாக அன்பான சித்தப்பாவாய்
அருமைமிகு எம் தாய்மாமனாக
பாங்கான மைத்துனராக சலிப்பறியாத சகலனாக
உற்றார், உறவினர் என்றும்
நண்பர்கள் எனவும் நயமாக உறவாடி
நலமாக வளம் குன்றா வாழ்வு வாழ்ந்து
வானுறையும் தெய்வத்துள் சங்கமமாகி விட்ட எங்கள்
அன்புத் தெய்வத்தின் பாதார விந்தங்களில்
**"நடேச தீபம்"** தனை
சமர்ப்பணம் செய்து வணங்குகிறோம்.


**ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!**

குடும்பத்தினர்

*அல்லைப்பிட்டி,*
*(136, இராசாவின் தோட்டம்,*
*நல்லூர்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



தந்தையாக

21 - 03 - 1936

தெய்வமாக

26 - 09 - 2019

அமரர்

# செல்லத்துரை நடேசபிள்ளை

(இனிச்ச புளியடி முருகன் ஆலய தர்மகர்த்தா பிரபல வர்த்தகர்)

## திதி நிர்ணயம்

சீரார் விகாரி வருடம் புரட்டாதி இருபத்தாறாம் நாள்
பேரார் தேய்பிறை துவாதசி திதி துலங்க
ஏரார்குலத்து செல்லத்துரை உடையார் மகன் நடேசபிள்ளை
நீரார் சடையுடை நிமலன் பதம் நண்ணினனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

அல்லைப்பிட்டி
இனிச்ச புளியடி ஸ்ரீ முருகன் ஆலய ஸ்தாபகராகிய
செல்லத்துரை உடையார் - சொர்ணம்மா அம்மையார்
அன்னாரின் பெற்றோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# சிதம்பரநாதர் - சொர்ணம்மா

# அன்னாரின் மாமன், மாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

அல்லைப்பிட்டி

இனிச்ச புளியடி ஸ்ரீ முருகன் ஆலய

அறங்காவல் வாரிசுகளாகிய

# உடையார் பெருமானின் பிள்ளைகள்

## அன்னாரின் சகோதரர்கள்



அமரர்
செ. தவவிநாயகம்



அமரர்
திருமதி.
ஞா. தையல்நாயகி



அமரர்
செ. வேலாயுதபிள்ளை



அமரர்
திருமதி.
ச.நடேஸ்வரி

இ. ... சுமி



அமரர்
திருமதி.
இ.சிவயோகலட்சுமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

அமரர்
செல்லத்துரை நடேசபிள்ளை அவர்களின்

# இளமைத்தோற்றம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# லோகேந்திர துரைச்சாமியை அமரர் கௌரவிக்கும் போது




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# சித்திரத்தேர் வெள்ளோட்டம்



# அமரரின் வியாபார நிலையம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# கோயில் பழைய தோற்றம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# பஞ்சபுராணம்



*திருச்சிற்றம்பலம்*

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனைமுகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே

## தேவாரம்

நின்னாவார் பிறரன்றி நீயேயானாய்
நினைப்பார்கள் மனதுக்கோர் வித்துமானாய்
மன்னானய் மன்னவர்க்கே ரமுதமானாய்
மறை நான்குமானாய் ஆறங்கமானாய்
பொன்னானாய் மணியானாய் போகமானாய்
பூமிமேல் புகழ்தக்க பொருளேயுன்னை
என்னானாய் என்னானாய் என்னினல்லால்
ஏழையேன் என் சொல்லி ஏத்துகேனே.

## திருவாசகம்

நாடகத்தால் உன்னடியார் போல் நடித்து
நான் நடுவே
வீடகத்தே புகுந்திடுவான் மிகப் பெரிதும்
விரைகின்றேன்
ஆடகச்சீர் மணிக்குன்றே இடையறா
அன்புனக்கென்
ஊடகத்தே நின்றுருகத் தந்தருள் எம்
உடையானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

இவ் அரும்பிறவிப் பௌவ நீர்நீத்தும் ஏழையேற்கு
என்னுடன் பிறந்த
ஐவரும் பகையே யார் துணை என்றால்
அஞ்சல் என்று அருள் செய்வான் கோயில்
கைவரும் பழமை குழைந்த செஞ்சாவிக்
கடைசியர் களை தரு நீலம்
செய்வரம்பும் அரும்பும் பெரும்பற்றத்
புலியூர் திருவுளார்

## திருப்பல்லாண்டு

குழலொழி யாழொலி கூத்தொலி யேத்தொலி
யெங்கும் குழாம் பெருக
விழவொலி விண்ணளவுஞ் சென்று விம்மி
மிகுதிருவாரூரின்
மழவிடை யார்க்கும் வழிவழியாளாய்
மணஞ்செய் குடிப்பிறந்த
பழவடியாரொடுங் கூடி யெம்மானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின்
வேண்டகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல்
உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நாள்
மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும்போது உன்னடியின் கீழ்
இருக்க என்றார்

## திருப்புகழ்

பிற்வியலை யாற்றினிற் புகுதாதே
பிரகிருதி மார்க்கமுற்றவை யாதே
உறுழிருகு வாக்கியப் பொருளாலே
உனது பத காட்சியைத் தருவாயே
அறுசமய சாத்திரப் பொருளோனே
அறிவுளறி வார்க்குணக் கடலோனே
குறுமுனி வனேத்தே முத்தமிழோனே
குமரகுரு கார்த்திகைப் பெருமாளே

## வாழ்த்து

ஆறிரு தடந்தோள் வாழ்க! ஆறுமுகம் வாழ்க! வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க! குக்குடம் வாழ்க! செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க்! யானைதன் அணங்கு வாழ்க!
மாறிலாவள்ளி வாழ்க! வாழ்கசீர் அடியார் எல்லாம்

*திருச்சிற்றம்பலம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர்

# செல்லத்துரை - நடேசபிள்ளை

அவர்களின்

## வரலாற்றுப் பதிவுகள்

நாற்திக்கும் கடலலைகள்
நலமுடனே தாலாட்டும்
ஈழமணித் திரு நாட்டில்
இலங்கிடும் இனிய தமிழ்
மணம் கமழும்
யாழ் நகரின் - கண்ணே
புகழ் விளங்கிடும் புண்ணியப் பதியாம்
அல்லிப்பூ மலரும் அல்லையூர் தனிலே
ஆலயமணி ஓசை ஆனந்தமாய் ஒலிக்க
அந்தணர் வேதம் ஓத அகங்காரம் அகலும்
தேவன் கோயில் திருந்தாதி மணிஓசை
மங்கலமாய் அருள் சுரக்கும்
தெங்கும் பனை நுங்கும்
தேனாய் இனிக்கும்
பன்னிரு மாதமும் பயிர்வகைகள் மலரும்
பொன்னென மிளிர்ந்து
நெல்வயல் விளைந்திடும்
புகையிலையும், மிளகாயும்
மிடுக்கான செல்வம் தரும்
வெங்காயச் செய்கையிலே
மங்காத தனம் குவியும்
ஏருரும் எம் மண்ணில்
காராளர், கமக்காரர்
கற்றுணர்ந்த பண்டிதர்கள்
கல்வியாளர் கனவான்களென
கனிவுடனே வாழும்
தொல்லையில்லாத ஊர்
அல்லைப் பிட்டியிலே
செல்லத்துரை உடையார்
உத்தம மா மனிதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதிலார்க்குதவிடும்
கற்றுணர்ந்த கண்ணியவான்
அன்று முதல் இன்று வரை
மேதினி புகழ்பாடும் புண்ணியவான்
வாழ வழியற்றவர்க்கு
இன்னார் இனியாரென்றறிந்து
நல்வழி சமைத்த வள்ளல்
வந்தோரை வரவேற்று
விரும்தோம்பும் பெருந்தன்மை
பேரான மதிநுட்பம்
நேரான வாழ்வு
பிணக்குகள் பல தீர்த்து - மக்கள்
இணக்கமாய் வாழ வைத்த
வையகம் புகழோச்சும் பெரியோன்
சாதுர்ஜமான பேச்சு
சமாதானமான நோக்கு
மண் பற்றுடன் மக்கள் நலமோங்கிட
மகத்தான சேவை செய்த
செல்லத்துரை உடையார்
உத்தமமான உன்னத வாழ்வினில்
வேண்டிய வளம் மலரும்
வேலணைப் பதியில்
தோன்றிய பெருமகன்
கீர்த்தி மிகு கிராம அதிகாரி
ஐயம்பிள்ளை தலைமகள்
சொர்ணம்மாவைத் திருமணம் புரிந்து
நேர்த்தி மிகு வாழ்வமைத்து
தோத்திரப் பாக்களுடன்
இறைபணி பூண்டு,
இனிச்ச புளியடியான் பதம் தொழுது
பண்டுநல் தவமிருந்து பரமனின் அருளால்
மக்கட் செல்வம் மனையினிற் சிறக்க
அகமகிழ்வுடனே முன்மகனாம்
அல்லையூர் கிராம சபைத் தலைவன்
வீரமும், வியூகமும் கொண்ட வித்தகன்
விதானையார் செந்தமிழ்ப் பற்றாளன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயவுடையோன் தவ விநாயகம்
மையல் விழியழகாள் மாதரசி
தையல் நாயகி வேலவனின் நாமம்தனை
மெய்மலரக் கொண்டவன் வேண்டிய வளம் மிகு
வேலாயுதபிள்ளை, சீர்பெறு பெருமாட்டி
பேர் பெறும் சிவயோக லெட்சுமி
நன்மகளாம் நாயகி நடேஸ்வரி
கண்ணிய வாளன் கடைக்குட்டி
பண்ணிய புண்ணியத்தால்
எண்ணங்கள் மலர்ந்திட

வண்ணமாய் உதித்த பொன்மகன்
தங்க நகை மாட உரிமையாளன்
மீன் பாடும் மட்டு நகர்
ஈஸ்வரி சினிமாத் திரையரங்கின்
தேசுறு தொழிலதிபன்
சோர்விலா நெஞ்சினன்
சொந்த நற் தொழிலழகன்
இனிச்ச புளியடி முருகனின்
இங்கிதமான அறங் காவலன்
சிவன் நாமம் பூண்ட
நாயகன் நடேசபிள்ளையை
நானிலம் போற்றக் கண்டனர்
வாலிபக் கோலமும்
வந்துமே மிளிர
வானம் பார்த்த பூமியின் மீது
வண்ணமுறவே பயிர்வகை மலரும்
கண்ணாக் காட்டிடையே கனிவான தென்றல்
எண்ணங்கள் மகிழ எழிலுடன் பவனி வரும்
வழியினில் ஐங்கரன் ஜோதியாய் வீற்றிருந்து
அச்சங் கழைந்தருள்மல்க
பாதை வழி இருபுறமும் பக்குவமாய் நெல்வயல்
பச்சைப் பசேலெனவே பரவசமாய்க் காட்சி தரும்
தடல் மலர்ந்த புகையிலையும், மிளகாயும்
தளராத தனம் குவிக்கும்
வெங்காயச் செய்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கம் போல் செல்வம் தரும்
ஏர் உழவர் எல்லாம் பார்புகழ வாழ்ந்திட
காராளர், கமக்காரர், கல்வியாளர்
தாராளமாய் வாழ்ந்த மண்ணாம்
மண்டைதீவு எனும் மகத்தான தீனில்
இலங்கிய பெருமகன்
இலங்கை நாயகமுதலி - பரம்பரையில்
துலங்கிய பேராளன் சீராளன் சிதம்பரநாதன்
தூயநற்துணையாள் சொர்ணம்மா இணைந்த
இல்லறப் பயனால் இனிதுற உதித்த
வல்லவள் வளமுறு பெருமகள்
பந்தபாசமுள்ள சொந்த மைத்துனி
மட்டுவார் குழலாள் மங்கையற் கரசியை
நாயகன் நடேசபிள்ளையர் பிரியமாய்
தொட்டுத் தங்க நாண் பூட்டி மகிழ்ந்தார்
இங்கிதமாகவே இறைபணி பூண்டு
இனிச்சபுளியடி முருகன் தலத்தின்
இளைய தர்மகர்த்தாவாய்
இறுதி மூச்சுவரை இயங்கிய
இல்லத்தரசன் இறைபணியாளன் இவர்
கண்ணெனவே கடமைதனை
பொன் போலக் காத்து நின்றார்
இல்லற வாழ்வின் நல்லறப் பயனால்
இனிதுமே உதித்தனர்
நன்மக்கட் செல்வங்கள்
ஆரா அமுதெனவே அறுவர் ஆனந்தமாகவே
கனிவான முதற் செல்வம் கஜந்தினி
இதமுடன் இலண்டன் மாநகர்தனில்
பதமுடன் வாழ்பவள்
பிரியமுடன் பிரான்ஸ் நகர்வதியும்
சுந்தரவதனி சுதாஜினி
பிரான்ஸ் நகர் வாசியாய்
வளமுடன் வாழ்வோன்
வாஞ்சைமிகு முன்மகன்
தூயவன் துஷ்யந்தன்
இங்கிதமாகவே இலண்டன் நகரினில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனிதுற வாழ்ந்திடும் இனியவன்
கண்ணியமானவன் கஜநேசன்
கனிவான பெண்மகள் கச்சிதமாய் லண்டனில்
மெச்சிடவே வாழ்ந்திடும் கமலினி
இலண்டன் மாநகரினில் மாண்புடன் வாழ்பவள்
கனிவான கடைக்குட்டி பணிவான புத்திரி
பிரியமானவள் பிரியதர்சினி
அறுவரை பெருமையாய்
பெறும்பேறாகப் பெற்றார்
மக்கட் செல்வங்கள்
மகத்தாக வளர்ந்து
தக்க கல்வி கலைகள் பயிற்றுவித்து
உற்ற அறிவூட்டி உன்னதமாகவே
உரிய காலம் வரும் காலை
திருமண பந்தம் தனில் இணைத்து
திருப்தியுற வாழ்ந்தார்
மக்கட் செல்வங்களின்
மதிப்பான துணைகளை
மருமக்களாக மனமகிழ்வெய்தி
உரிமையுடன் கண்டார்
உற்ற மருமகன் உத்தமனாம்
தேசு புகழ் பிரபாகர்
சீர்பெறு சிவகுமார்
சங்கத் தமிழ் மொழியாள் சங்கீதா,
சியாமள ரூபினி சியாமளா
வித்தகன் விஜயானந் ஜவரை
மருமக்களாய் மெய்மலரக்கண்டு
தம் மக்கட் செல்வங்களின்
மகிழ்வுறு மழலைகளை
பேரர்களாய் கண்டு பூரிப்படைந்தார்
நேத்திரா, கஜீஸ், வைஷ்ணவன்
தாரிக்கா, தர்சனா, தர்சினி
சபரிகரிஸ், சாம்பவி, வர்ஷன்
யஸ்விக்கா, சங்கீத்
பதினொரு பேரர்களை
பாரினில் பெருமையாய்க் கண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளம் மகிழ்ந்துமே
அள்ளி அரவணைத்து
அமுத மொழி பேசி
அறிவுரைகள் பகன்று
ஆனந்தமடைந்தார்
இனிய உடன் பிறப்புக்களின்
ஈடிணையில்லாத் துணைகளை
மைத்துனர்களாக மனமகிழ்வாக ஏற்றார்
அன்னையாய் மதிப்பளித்து
அண்ணியாய் வாய்க்கப் பெற்றார்
புண்ணியவதியாம் கிருஷ்ணாம்பாள்
வித்தகன் விவாகப் பதிவாளர்
கலைஞானமிகு ஞானசம்பந்தர்
தபாலதிபர் தக்கார் போற்றிடும்
தகுதிமிகு சமாதான நீதிபதி
சிவகாமி சமேத நடராசர் பக்தன்
திருவெண்காடு திருத்தலத்தின்
திடமான அறங்காவலன்
அகில இலங்கை தமிழ் பேசும்
தபாலதிபர் சங்கத்தின்
தார்ப்பரியமான தலைவன்
இனிமைமிகு சொல்லாழன்
இரத்தின சபாபதி
சங்குணவாளன் மெச்சிடும் பெருமகன்
சச்சிதானந்தம்
வேண்டிய வளம் கொழிக்கும்
வேலணை வாசி
சீர்பெறும் சிறாப்பர் கந்தையா
செல்வமகள் செல்வ லக்ஷ்மி
புண்ணியவாட்டி புவனேஸ்வரி
சுந்தரவதனன் சுயம்புலிங்கமுடன்
பண்பும் பாசமும் கொண்ட
பரிவான மைத்துனர்
உதிரத்தின் உறவான
மன உறுதி கொண்ட மாண்பினன்
திருவுடையோன் திருவெண்காட்டான்
பெருமைமிகு அறங்காவலன்
திருநாவுக்கரசு தனை
உரிமைமிகு மைத்துனராய் அடைந்தார்.
பார்புகழ் பரமேஸ்வரி

இனிமைமிகு இதயம்
இதமான கிளாக்கர்
இராமநாதன்
சீராளன் சிவரட்ணம்
ஜெயம்மிகு ஜெயசிறி
பண்புடையாள் பராசக்தி
அன்புடை சகலர்களாகக் கண்டு
சந்தோசமாய் வாழ்ந்தார்
முல்லைச் சிரிப்பழகும்
முழுமதிபோல முக அழகும்
நெற்றியிலே விபூதியுடன்
சந்தனத்திலகமிட்டு
மெல்லிய தென்றலது
மூங்கில் வழி நுழைந்து வந்து
செவியினிலே விழுவது போல்
தேன் போன்ற பேச்சழகும்
இறுதிவரை உறுதியுடன்
இனிச்ச புளியடியான்
பதம் பற்றிப் பணி செய்த
இறை பணியழகும் கொண்டு
தொண்டனாக நின்ற,
நாவல்லோன் நடேசபிள்ளை
அண்ணல் அவர்
வேதனவன் விதித்த விதியதனின்
நியதியினால்
தொல்லையிலும் பிறவி நீங்கி
அல்லல் அறுத்து ஆனந்தமாக்கியோன்
தில்லை நடராசர் பதம்
எண்பத்தி மூன்று அகவையிலே
விண்பற்றை நாடி விரைந்தார்.

சுபம்

திருவெண்காடு
மண்டைதீவு - 6

ஆக்கம்
தலைத்தீவான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரார்த்தனை உரை

தூங்குவது போலும் சாக்காடு

தூங்கி எழுவது போலும் பிறப்பு

இறைவன் படைத்துள்ள சர்வ படைப்புக்களில் உன்னதமான படைப்பு மனிதன் ஆகும். உலக வாழ்க்கை என்பது இறைவன் எமக்கு வழங்கிய அருட்கொடை ஆகும். இந்தப் பிறப்பு முதல் இறப்பு வரையான மனித வாழ்க்கையில் நாம் மன நிறைவுடன் செய்யும் காவியங்களே அவனது இருப்பின் பின்னும் வாழவைக்கும்.

இந்த வகையில் மறைந்த பெருமதிப்பிற்குரிய செல்லத்துரை நடேசபிள்ளை அவர்கள் அல்லப்பிட்டி இனிச்ச புளியடிப் பதியில் வாழ்ந்து தன் மழலைச் செல்வங்களோடும் பேரப்பிள்ளைகளோடும் உறவினர்கள் நண்பர்களோடும் அன்போடும், பண்போடும் சீரும் சிறப்புடனும் அனைவரையும் தன் இனிய புன்சிரிப்பால் ஈரப்பதுடன் பல சாதனைகளை நிலைநாட்டி இனிச்ச புளியடி முருகனின் பால் தன்னையே முழுமையாக அர்ப்பணித்து வாழ்ந்து வந்தார். எந்நாளும் முருகனின் திருநாமங்களை உச்சரிப்பதோடு எப்போதும் நான் நல்லாயிருப்பதாகக் கூறுவார். நடேசபிள்ளை ஐயா அவர்களிடம் எப்படி ஐயா நலம் என்று கேட்டால் எனக்கு முருகன் இருக்கிறார் என்று கூறுவார். ஐயா அவர்களில் இனிய சொற்களையும் புன்சிரிப்பையும் எப்போது இனிக் காண்பது?

**முதுமொழி**

இறந்திடப் பிறந்தீர்
பிறந்திட இறந்தீர்
எல்லோருக்கும் சமனான இரண்டு
பிறப்பு, இறப்பு

**பட்டினத்தார் பாடல்**

விட்டுப்விடப் போகுதுயிர் விட்ட
உடனே உடலைச் சுட்டுவிடப்
போகிறார் சுற்றத்தார்.

ஐயா அவர்களின் பிரிவால் துயருறும் குடுப்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களையும் இரங்கலையும் தெரிவித்து அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!*

சிவஸ்ரீ இ. பாலகிருஷ்ணக் குருக்கள்
ஸ்ரீ மனோன்மணி அம்பாள்
திருக்கோவில் கொம்மங்கடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்புள்ளங் கொண்ட சின்ன மாமா

அல்லைப்பிட்டி செல்லத்துரை உடையாரின் ஆறு பிள்ளைகளில் கடைசியாகப் பிறந்தவர் தான் எங்கள் அருமைச் சின்ன மாமா. நாங்கள் பிறந்த நாட்தொட்டு அவரின் அன்பிலும் அரவணைப்பிலும் திளைத்தவர்கள். அருகருகேயுள்ள வீடுகள், அடிக்கடி கலந்துறவாடும் சூழல்கள். எந்த விடயம் நடந்தாலும் உடையார் அனைவருக்கும் பொதுவாகக் காணப்படும் ஒத்த மனப்பாங்கும் ஒற்றுமையும். காலம் எங்களை வெளிநாடுகளுக்கு நகர்த்திச் செல்லும் வரை சின்ன மாமாவின் நிழலில் எங்களுக்குப் பாசமும், பாதுகாப்பும் கிடைத்தது. வெளிநாட்டுக்குச் செல்ல விரும்பாத மனம் அவருடையது. தனது குலதெய்வமான முருகனையும் பிறந்த மண்ணையும் பிரிய முடியாமையினால் தான் மாமா இங்கேயே வாழ்ந்தார். ஒருகூட்டுப் பறவைகளாகிய நாம் அடிக்கடி அவரைத் தேடி, அவரது அன்பை நாடி ஓடி வருவோம். அதற்கான வாய்ப்புக்களை இனிச்ச புளியடியானின் மகோற்சவ காலமும், கோயிலின் அபிவிருத்தியும் எமக்கு ஏற்படுத்தித் தந்தன. எமது தாயாரிடத்தில் எப்போதும் பிரியமுள்ளவர் மாமா. அதேபோல் என்றைக்கும் மாறாத பேரன்பு எமது தந்தையாரும் தபாலதியராயிருந்தவருமான திரு. சி. இரத்தின சபாபதியிடமும் அவருக்குண்டு. இருவரும் எந்தக் காரியமானாலும் மனம்விட்டுப் பேசி முடிவெடுப்பர். அதேபோல் தனது நடுவில் அக்காவின் பிள்ளைகளின் மீது அவருக்கு மாறாத அன்பும் நம்பிக்கையும் உண்டு. இன்று சின்ன மாமா எங்களுடன் இல்லை என்பதை நினைக்கவே முடியவில்லை. எங்களை இயக்குகின்ற மறைமுகமான ஆதர்ச சக்தி இனிச்ச புளியடி முருகனிடமும் சின்ன மாமாவிடமும் தான் இருப்பதாக நாம் நம்பிக்கையுடன் வாழ்ந்து வந்தோம். என்ன செய்வது? சின்ன மாமா தனது குலதெய்வத்தின் திருப்பாதங்களில் சரணடைந்துவிட்டார். நமக்கெல்லாம் ஆறாத துன்பத்தைத் தந்துவிட்டு அவர் அமைதி கண்டு விட்டார். அவரது ஆத்ம சாந்திக்காக எங்கள் இனிச்ச புளியடி இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மாமாவின் நினைவில் வாழும்,

அமரர்கள் சி. இரத்தினசபாபதி – சிவயோகலட்சுமி
தம்பதிகளின் பிள்ளைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடேசண்ணர்

எனது சின்ன வயதிலிருந்தே தெரிந்த முகம், பின்னர் அறிந்த முகம், அதற்குப் பின்னர் நன்கு புரிந்த அன்போடு உறவாடிய முகம் உங்களுடையது. சுமார் 50 ஆண்டுகளுக்கு மேலாக "அண்ணே" என்று நான் அழைத்தால், "என்ன தம்பி திருநா" என்று நீங்கள் கேட்கும் போது பாசமும் அக்கறையும் அதில் பளிச்சிடும். செல்லத்துரை உடையாரின் கடைசி மகனாகப் பிறந்தாலும், ஊரவர்கள், உறவினர்கள், அயலூரவர்கள் யாவரதும் பேரன்புக்கும், பெருமதிப்புக்கும் உரியவராய் உங்களை ஆக்கிக் கொண்டீர்கள். சிறிய வயதிலிருந்தே கடுமையாக உழைத்தீர்கள். மட்டக்களப்பிலும், யாழ்ப்பாணத்திலும் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுத் தொழிலதிபர் ஆனீர்கள். இருந்தும் எவரிடமும் பணிவாகப் பேசும் உங்கள் பக்குவம் குறையவில்லை. உள்ளவர், இல்லாதவர் என்றும், நல்லவர், கெட்டவர் என்றும், உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்றும், வேண்டியவர், வேண்டாதவர் என்றும் பேதம் பாராட்டாத உள்ளம் உங்களுடையது. எவராயிருப்பினும் அவர்கள் வீட்டில் நடைபெறும் நல்லது, கெட்டதுகளில் தவறாது உங்கள் மனையாளுடன் கலந்து கொண்டு 'நானும் உங்களுடன் தான்' என்பதை உறுதிப்படுத்துவீர்கள். உங்களில்லம் நாடி வந்த எவராவது தேநீரோ, மோரோ, உணவோ பெறாமல் திரும்ப முடியாத விருந்தோம்பற் பண்பு உங்களுடைய குடும்ப சீதனம். அதேபோல் எத்தனை பேருக்கு உதவி என்று கேட்ட போது வலது கை கொடுப்பதை இடதுகை அறியாமல் கொடுத்து உதவியிருக்கிறீர்கள். திரும்பி வராத கடனென்று தெரிந்தும் அள்ளித் தரும் நல்மனம் உங்களுடையது. எத்தனை ஏழைகளை உணவளித்து, உடை தந்து, அவர்கள் காலம் முழுவதும் ஆதரித்து இயன்றவரை காப்பாற்றியுள்ளீர்கள். எத்தனை இளைஞர்களுக்குத் தொழில் பெற, கல்வி பெற, திருமணஞ் செய்ய, வெளிநாடு செல்ல உங்களது அன்புக்கரங்கள் உதவியதை நினைக்கும் போது உள்ளம் கசிகிறது.

உடையார் குடும்பம் முழுவதையும் ஒரு குடைக்கீழ் இணைத்து வைத்த பேராலவிருட்சமாய்த் திகழ்ந்தீர்கள். படிப்படியாக உங்கள் குலதெய்வமான இனிச்ச புளியடி முருகனுக்கு புத்தாலயம் அமைத்து கொடியேற்றி மகோற்சவம் நடத்தி, புதிய சித்திரத் தேரோடவும் இரண்டு வருடங்கள் கண்ணாரக் கண்ட திருப்தியினாலோ இனிப் பிள்ளைகள் பார்த்துக் கொள்வார்களெனக் கருதி, இனிச்ச புளியடியான பாதங்களில் சரண்புகுந்தீர்கள் அண்ணா. ஊரவர்க்கு ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிக்கை விளக்காக விளங்கினீர்கள். எவரையும் புண்படுத்தாத மனம் உங்களுடையது. என் மீது தனியான வாஞ்சையுடன் இருந்தீர்கள். நீங்களே நடப்பதற்கு முடியாமல் தளர்ந்த நிலையிலும் என்னைக் கை தந்து தாங்கிப் பிடிக்க எப்போதும் முன்வருவீர்களே அண்ணா. மண்டைதீவுப் பிள்ளையார் கோவில் தேர்த்திருவிழாவில் நீங்கள் உள்வீதி சுற்றி வரும் போது கண்டு கதைத்தேனே! அதுவே இறுதிச் சந்திப்பாகி விட்டதே! ஆஸ்பத்திரியில் உங்களைப் பார்க்க வந்த என் மனைவியிடம் 'தம்பி எப்படி இருக்கிறார்' என்று தானே முதலில் கேட்டீர்களாம். உங்களுடைய மகன்மார் வெளிநாடுகளில் இருந்து வந்தாலும் திருநாவிடம் சென்று வாருங்கள் என்று அனுப்பி வைப்பீர்களே! கடந்த பல வருடங்களாக என்னோடு நீங்கள் பழகிய விதம், ஏதாவது வாழ்த்துரைகள் - செய்திகள் எழுத வேண்டுமென்றால் 'தம்பி அதை எழுதித் தாரும்' என அன்போடு கேட்கும் சுபாவம், கடைசியாகச் சில நாட்கள் முன்பு மாம்பழம் கொண்டு வந்து தந்துவிட்டுச் சென்ற பேரன்பு இவற்றை மறக்க முடியுமா அண்ணா!

ஏதோ நீங்களில்லாத இடத்தை நோக்கும் போது வெறுமை சூழ்ந்து தெரிகிறது. உயிரோடு உலவிய உங்களைச் சிலை வடிவில் காண நேர்ந்ததே அண்ணா! என்றும் உங்களது நினைவு எம்மை விட்டு நீங்காது. இனிச்ச புளியடியான் இருக்கும் வரை நடேசண்ணரின் அன்பும், ஞாபகமும் நம்மை எப்போதும் வழிநடத்தும். உங்கள் ஆத்மா பரிபூரணானந்தம் பெற எல்லாம் வல்ல இறையருளை இறைஞ்சுகின்றேன்.

**"குடம்பை தனித்தொழியப் புள்பறந் தற்றே**
**உடம்போ டுயிரிடை நட்பு"**

**- குறள் -**

**திரு. செ. திருநாவுக்கரசு**
**அல்லைப்பிட்டி - 1**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தற்பெருமையில்லாப் பெருவிருட்சம்

நடேசண்ணன்" இவ்வாறுதான் நாங்கள் சிறுவர்களாக இருந்த காலம் தொட்டு அவரை அழைத்தோம். கிராமங்களில் ஒரு வழக்கம் இருக்கிறது நமது பெற்றோர் ஊரவர்கள் சிலரை எவ்வாறு அழைக்கிறார்களோ அந்த அடைமொழி கொண்டே சம்பந்தப் பட்டவரை நாமும் அழைப்போம். அது வயது வித்தியாசம் ஒரு தலைமுறை இடைவெளி இருந்தாலும் கூட.

அமரர். நடேசபிள்ளை அவர்களை நான் சுமார் ஆறு வயது சிறுவனாக இருந்த காலம் தொட்டு அறிவேன். அல்லைப்பிட்டி இனிச்ச புளியடி முருகன் ஆலயத்தில் வெள்ளிக்கிழமை இரவுப் பூசை மிகவும் எளிமையாக நடைபெற்ற 1970 களில் இந்த மனிதர் அந்த ஆலயத்தில் நடு நாயகமாக நின்றிருப்பதை, பூசை முடிவில் பிரசாதத்தை சிறுவர்களாகிய எமக்குப் பகிர்ந்தளிப்பதைப் பார்த்திருக்கிறேன். அப்போதெல்லாம் இவர்தான் அந்தக் கோயிலின் "தர்மகர்த்தா" என்பது எனக்கு தெரியாது.

பழகுவதற்கு எளிமையான மனிதர். எல்லோருடனும் பண்பாக, சமத்துவமாக பழகக் கூடியவர். தான் அந்த ஊரின் "உடையாரின் மகன்" என்ற தற்பெருமையோ, அல்லைப்பிட்டியில் வாழ்ந்த விரல் விட்டு எண்ணக்கூடிய பணக்காரர்களில் ஒருவர் என்ற கர்வமோ சிறிதும் இல்லாதவர்.

அமரர்களாகி விட்ட எனது பேரனும், பேர்த்தியும் (அம்மப்பா ரூ அம்மம்மா) காலம் சென்ற செல்லத்துரை உடையார் குடும்பத்தின் அயலவர்களாக ஊரின் மத்தியில் சுமார் 30 வருடங்கள் வாழ்ந்த காலத்தில் உடையார் குடும்பத்தினருடன் "அயலவர்கள்" என்ற உறவையும் தாண்டி உறவினர்கள் போல ஒரு நெருக்கமான உறவைக் கொண்டிருந்தனர் என்று எனது பேர்த்தியார் சொல்லக் கேட்டிருக்கிறேன். அந்த "நேசமான உறவு" பிற்காலத்தில் எனது பேரனும் பேர்த்தியும் இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் உள்ள அல்லைப்பிட்டிச் சந்திக்கருகில் குடியேறிய பின்னரும் அமரர்.நடேசபிள்ளை குடும்பம் உட்பட உடையாரின் பிள்ளைகள் அனைவரோடும் தொடர்ந்ததைக் கண்கூடாகக் கண்டிருக்கிறேன்.

தொழில் துறை என்று எடுத்துக் கொண்டால் இவர் தனது வணிக நிறுவனங்களை எங்கள் தீவகத்தின் "புங்குடுதீவு" தொடக்கம் கிழக்கிலங்கையின் "மட்டக்களப்பு" நகரம் வரை விரிவு படுத்தி இருந்தார். தன்னை யாரும் "முதலாளி! என்றோ "மூளை" என்றோ அழைப்பதை அவர் விரும்பியதில்லை. "என்னப்பா முதலாளி? என்னப்பா தொழிலாளி? எல்லாரும் முதலாளி தான் எல்லாரும் தொழிலாளி தான்" என்பார். அத்தகைய சமத்துவ எண்ணம் அவருடையது. அவரது வணிக நிறுவனங்களில் அது எந்த ஊரில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்திருந்தாலும் அங்கு பணி புரிபவர்களில் அரைவாசிப் பேர் அந்த ஊரைச் சேர்ந்தவர்களாகவும், மீதி அரைவாசிப் பேர் அல்லைப்பிட்டிக் கிராமத்தைச் சேர்ந்தவர்களாகவும் இருக்குமாறு பார்த்துக் கொண்டார். காரணம் மிக வெளிப்படையானது "எந்த ஊரில் பணம் சம்பாதிக்கிறோமோ அந்த ஊரவனும் பயன்

(வேலைவாய்ப்பு) பெறட்டும் நம் ஊரவனும்( அல்லைப்பிட்டி) பயன் பெறட்டும் என்ற உயர்ந்த எண்ணம் தான் அது. இவரது பெருந்தன்மைக்கு உதாரணமாக இன்னொன்றையும் கூறலாம் என்று நினைக்கிறன். அவர் தனது வணிக நிறுவனங்களின் கணக்குகளை எழுதுவதற்கு நினைத்திருந்தால் ஒரு கணக்காளரை பணியில் அமர்த்தி இருக்க முடியும் ஆனால் எங்கள் ஊரை சேர்ந்த ஆனால் யாழ்ப்பாணத்தில் பிரபல கல்லூரியில் உயர் வகுப்பில்(யுஃடு) "வர்த்தகமும் கணக்கியலும்" (Commerce & Accountancy) படித்துக் கொண்டிருந்த ஒரு மாணவனை தனது "கணக்காளராக" பணிக்கு அமர்த்தினார். ஊரவர்கள் கேட்டதற்கு அவர் கூறிய காரணம் "ஒரே ஒரு ஆண் பிள்ளையைக் கொண்ட அந்தக் குடும்பத்திற்கு உதவியதாகவும் ஆயிற்று, அந்த இளைஞனின் தன்னம்பிக்கையை, எதிர்காலம் பற்றிய அவனது பிடிப்பை உயர்த்தி விட்டதாகவும் ஆயிற்று் எனக்கும் உள்ளூரிலேயே ஒரு "கணக்குப்பிள்ளை" கிடைத்ததாகவும் ஆயிற்று" இத்தகைய விரிந்த பார்வைக்கு சொந்தக் காரர் தான் அமரர்.செ.நடேசபிள்ளை அவர்கள்.

"ஈதல் இசைபட வாழ்தல் அஃதன்றி ஊதியம் இல்லை உயிர்க்கு" என்ற வள்ளுவரின் வாக்கினை அடியொற்றி வாழ்ந்த அல்லைப்பிட்டி உடையார் அமரர்.செல்லத்துரை அவர்களைப் போலவே அவரது பிள்ளைகளும் குறிப்பாக அமரர்.நடேசபிள்ளை அவர்களும் வாழ்ந்து காட்டி மறைந்தார்கள் என்றால் அது மிகையாகாது. தனது வாழ்நாள் முழுவதும் அறப் பணிகளையும், தான தருமங்களையும் செய்து தனது சந்ததிக்கு புண்ணியத்தை சேர்த்து வைத்து விட்டே அமரர் நடேசபிள்ளை அவர்கள் மறைந்தார். தனது தந்தையார் (அமரர்.செல்லத்துரை உடையார்) மிகச் சிறிய ஆலயமாகத் தன்னிடம் ஒப்படைத்து விட்டுப் போன "அல்லைப்பிட்டி இனிச்ச புளியடி முருகன் ஆலயத்தை" 10 நாட்கள் திருவிழா நடைபெறும், வானளாவிய கோபுரத்தைக் கொண்ட ஒரு ஆலயமாக மாற்றி விட்டு தனக்கும், தன் தந்தைக்கும் பெருமை சேர்த்து விட்டே இறைவனடி சேர்ந்தார் அமரர்.நடேசபிள்ளை அவர்கள். "நிலை உயரும் போது பணிவு கொண்டால் உயிர்கள் உன்னை வணங்கும்" என்பார் கவியரசர். தனது வாழ்வில் படிப்படியாக உயர்ந்தும் தனது மண்ணையும் மக்களையும் மறவாத பணிவான உள்ளம் கொண்ட அந்த மகத்தான மனிதனின் மறைவால் அல்லைப்பிட்டி மண் சோகத்தில் ஆழ்ந்துள்ளது. அந்த மனிதனின் பெருமையைப் போற்றி வணங்குகிறது. அதில் நானும் என் குடும்பத்தினரும் பங்கு கொள்கிறோம்.

போய் வாருங்கள் நடேஸ் அண்ணா! எங்கள் அல்லைப்பிட்டி மண் மறவாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதர்களின் பெயர்ப் பட்டியலில் உங்கள் பெயரும் இடம்பெற்று இருக்கும். நீங்கள் விண்ணுலகு எய்திய அதே நாளில் உங்கள் பெற்றோர், உடன் பிறந்தார் சகிதம் இறைவன் திருவடி நிழலில் பிறப்பில்லாப் பேரின்பப் பெருவாழ்வு எய்தி இருப்பீர்கள் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. உங்களுக்கு எனது இதய அஞ்சலிகள். உங்கள் இழப்பால் துயருற்று இருக்கும் உங்கள் குடும்பத்தினர், உற்றார், உறவினர், நம் ஊரவர்கள் அனைவர்க்கும் அமரர்களாகி விட்ட எனது பேரன், பேர்த்தி( சிவப்பிரகாசம் & தெய்வானை ஆச்சி) சார்பாகவும், என் பெற்றோர், தாய்மாமா மற்றும் சித்திமார் குடும்பத்தினரின் சார்பாகவும் எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு உங்கள் ஆத்ம சாந்திக்காக இறை பதம் பணிகின்றேன்.

ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி.

ஆழ்ந்த இரங்கலுடன்
இரா.சொ. லிங்கதாசன்
Frederikshavn
டென்மார்க்.

"இருந்தாலும் மறைந்தாலும் பேர் சொல்ல வேண்டும்
இவர் போல யார் என்று ஊர் சொல்ல வேண்டும்"

-கவிஞர் வாலி -

"வாழ்வாவது மாயம் - இது மண்ணாவது திண்ணம்
பாழ்போவது பிறவிக்கடல் பசிநோய்செய்த பறிதான்
தாழாதறஞ் செய்ம்மின்தடங் கண்ணான்மல ரோனும்
கீழ்மேலுற நின்றான்திருக் கேதாரமெ னீரே"

-சுந்தர மூர்த்தி நாயனார்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் திரு. செல்லத்துரை நடேசபிள்ளை அவர்கள்
## அல்லைப்பிட்டி

சூரியனுக்கும் வானகத்திற்கும் என்ன சம்பந்தம் இருக்கின்றது. அதேபோல் எனக்கும் நடேஸ் அண்ணருக்கும் என்ன உறவு இருக்கின்றது என்பதை சொல்ல வருகின்றேன். குறிப்பாக அல்லைப்பிட்டியில் எமது வாழ்க்கையில் கடந்த காலம் ஒரு பொற்காலம். அதில் நாம் வாழ்ந்த மகிழ்ச்சியான காலம் வசந்தகாலம். இன்று நாம் வாழும் காலம் இலைஉதிர் காலமாகவே இருக்கிறது.

ஈத விசைபட வாழ்தல் அதுவல்ல தூதிய மில்லை உயிர்க்கு
சாலமன் பாப்பையா உரை ஏழைகளுக்குக் கொடுப்பது அதனால் புகழ்
பெருக வாழ்வது இப்புகழ் அன்றி மனிதர்க்குப் பயன் ஒன்றும் இல்லை.

- குறள் 231 -

நடேசபிள்ளை அண்ணன் அவர்கள் எனக்கு செய்த உதவியும் அவர் காட்டிய அன்பும் அளவிட முடியாது. அதனால் இந்த குறளை ஞாபகப்படுத்தினேன். உங்கள் உதவிக்கும் என்னில் வைத்திருந்த அன்பிற்கும் நன்றி அண்ணா.

அன்று என்னுடன் உடையார் அவர்களின் குடும்பத்தினர் நடேசபிள்ளை அண்ணர் அவர்கள் வரையிலான வாழ்க்கைப் பாதையைத் திரும்பிப் பார்த்ததால் நினைத்தாலே இனிக்கும்.

பாரதி விழாவில் பராசக்தி பாடசாலையில் பன்னிரண்டு வயதில் விரக தந்திரம் வேண்டி நின்றார். பின்னர் வேறொன்று கொள்வாரோ? என்ற பாரதியாரின் பாடலை நான் பாடிப் புகழ் பெற எனக்கு குருவாக இருந்தவர் நண்பர் சச்சிதானந்தம் அவர்கள். அதற்கு வழி செய்தவர் அண்ணர் நடெசபிள்ளை அவர்கள் தான் இன்று தமிழில் சிறந்து நிற்க இது ஒரு காரணமாக அமைந்திருக்கிறது.

அன்று லோகேந்திரா துரைச்சாமி அவர்கள் அல்லைப்பிட்டி வந்த போது அந்த குழுவில் நானும் இருந்தேன். அன்று ஒரு பேச்சாளராக என்னை மேடையில் முதல் முதலாக நிற்க வைத்தவர் நடேசண்ணர் அவர்கள் தான். மறுநாள் 350 என்ற அல்லைப்பிட்டி சில்லாலை பஸ் ஓடத் தொடங்கியது. இவருடைய செயலால் தான். அரசியல் சமூகப் பணியில் அல்லைப்பிட்டிக்கு பெருமை ஏற்படுத்தியவர். இவர்களால் எனக்கு கிடைத்த வேலையை எனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பிக்கு வாங்கி கொடுத்து யாழ் பல்கலைக்கழகத்தில் எனது தம்பி வேலை பார்க்க வழி செய்ததும் அண்ணர் நடேசண்ணர் வழிநாள் என்னும் எத்தனை பேருக்கு வேலை பெற்று கொடுத்தோம். நன்மைகள் பல செய்தோம். இந்த குழுவில் என்னை இணைத்தவர் இவரே. இதை யார் அறிவார்கள் அறியுங்கள் எப்படி வாழவேண்டும் என்பதை இளைஞர்களே யுவதிகளே தெரிந்து கொள்ளுங்கள்.

நான் வெளிநாடு சென்றாலும் சில பண நெருக்கடியில் எமது தாய் இருக்கும் போது எனது பெயரைச் சொன்னால் பணத்தை அள்ளிக் கொடுக்கும் அண்ணனும் இவர் தான். 2016 இல் வந்து இவருக்கு நன்றி கூறி சென்றிருந்தேன். இனிமையானவர், அமைதியானவர், இறைபக்தியுள்ளவர், அன்பானவர் எந்த அதிகார பணப்பெருமையுமற்றவர். இவரை வயலில் காண்பேன். கோவிலில் காண்பேன். வழியில் காண்பேன். மனிதரை மதிக்கின்ற பண்பு கௌரவம் கொண்ட உடையாரின் பிள்ளைகள் இவர்கள். அன்பாக எம்மோடு இருந்தார்கள். மக்களே நீங்கள் தெரிந்து கொள்ளுங்கள். நடேசபிள்ளையண்ணரைப் பற்றி பாக்கியம் பெரியம்மா அதிகம் சொல்லுவார். பின்னர் நானும் அறிந்தேன். அண்ணா உண்மையில் உங்களைப் போல் அன்பானவர், பண்பானவர். இனி யாரண்ணா அல்லைப்பிட்டியில் இருக்கிறார்கள்.

உங்கள் வீட்டுப் பிள்ளைகளை மட்டக்களப்பு புங்குடுதீவு என வேலைவாய்ப்பைக் கொடுத்து வளர்த்து வாழ வைத்தது போல் நீங்கள் எங்களையும் விட்டுவிடாமல் அல்லவா வாழவைத்தீர்கள்.


அன்பாக வாழ்ந்து தானும் வாழ்ந்து மற்றவர்களையும் வாழவைத்து உதவி செய்து வாழ்வது தான் வாழ்ககை அதை நீங்கள் செய்துவிட்டீர்கள். உங்கள் ஆத்மா சாந்தி பெறும். உங்கள் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறி உங்களை வணங்கிஅ ஞ்சலி செலுத்துகின்றோம்.

அன்பின் அருள் தெய்வேந்திரன் சுவிசர்லாந்து
மற்றும் அருளானந்தம் குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறுபடை வீடுகளின்
# கந்தசஷ்டி கவசங்கள்



## தேவராய சுவாமிகள் அருளிய
## கந்தர் கவசங்கள் ஆறு

**காப்பு**

துதிப்போர்க்கு வல்வினைபோம், துன்பம் போம்,
நெஞ்சில் பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் கதித்து ஓங்கும்,
நிஷ்டையுங் கைகூடும்,
நிமலர் அருள் கந்தர் சஷ்டி கவசந் தனை.

அமரர் இடர்தீர அமரம் புரிந்த
குமரன் அடி நெஞ்சே குறி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பரங்குன்றுறைத் திருமகன்

## கவசம் ஒன்று

**சோமவாரத்தன்று படிப்பதற்குரிய கவசம் இது. இதனைப் படித்தால் முருகன் தானே குருவாக வந்து, சிறந்த புலமையை அருள்வான், எல்லா வலிமைகளும் எளிதில் கைகூடும், மனக் கவலை நீங்கும், அச்சம் அகலும், சகல தோஷங்களும் நிவர்த்தியாகும்.**

திருப்பருங்குன்றுறை தீரனே குகனே
மருப்பிலாப் பொருளே வள்ளி மனோகரா
குறுக்குத்துறையுறை குமரனே அரனே
இருக்கும் குருபரா ஏரகப்பொருளே

வையாபுரியில் மகிழ்ந்து வாழ்பவனே
ஒய்யார மயில் மீது உகந்தாய் நமோ நமோ
ஐயா குமரா அருளே நமோ நமோ
மெய்யாய் விளங்கும் வேலா நமோ நமோ

பழநியங்கிரிவாழ் பகவா நமோ நமோ
மழுவுடை முதல்வன் மதலாய் நமோ நமோ
விராலிமலையுறை விமலா நமோ நமோ
மராமரம் துளைத்தோன் மருகா நமோ நமோ

சூரசங் காரா துரையே நமோ நமோ
வீரவேலேந்தும் வேளே நமோ நமோ
பன்னிரு கரமுடைப் பரமா நமோ நமோ
கண்களீராறுடை கந்தா நமோ நமோ

கோழிக்கொடியுடைக் கோவே நமோ நமோ
ஆழிசூழ் செந்தில் அமர்ந்தாய் நமோ நமோ
சசச சசச ஓம் ரீம்
ரரர ரரர ரீம்ரீம்

வவவ வவவ ஆம் ஹோம்
ணணண ணணண வாம்ஹோம்
பபப பபப சாம் சூம்
வவவ வவவ கௌம் ஓம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லல லிலி லுலு நாட்டிய அட்சரம்
கக கக கக கந்தனே வருக
இக இக இக ஈசனே வருக
தக தக தக சற்குரு வருக

பக பக பக பரந்தாமா வருக
வருக வருகவென் வள்ளலே வருக
வருக வருக நிஷ்களங்கனே வருக
தாயென நின்னிருதாள் பணிந்தேன் எனைச்

சேயெனக் காத்தருள் திவ்யமா முகனே
அல்லும் பகலும் அனுதினமும் என்னை
எல்லிலும் இருட்டிலும் எரிபகல் படுக்கை
வல்லவிடங்கள் வாராமல் தடுத்து

நல்ல மனத்துடன் ஞானகுரு உனை
வணங்கித் துதிக்க மகிழ்ந்துநீ வரங்கள்
இணங்கியே அருள்வாய் இறைவா எப்போதும்
கந்தா கடம்பா கார்த்தி கேயா

நந்தன் மருகா நாரணி சேயே
என்னிலாக் கிரியில் இருந்து வளர்ந்தனை
தண்ணளி அளிக்கும் சாமிநாதா
சிவகிரி கயிலை திருப்பதி வேளூர்

தவக்கதிர்காமம் சார்திரு வேரகம்
கண்ணுள் மணிபோல் கருதிடும் வயலூர்
விண்ணவர் ஏத்தும் விராலி மலைமுதல்
தன்னிக ரில்லாத் தலங்களைக் கொண்டு

சன்னதி யாய்வளர் சரவண பவனே
அகத்திய முனிவனுக் (கு) அன்புடன் தமிழைச்
செகத்தோர் அறியச் செப்பிய கோவே
சித்துகள் ஆடும் சிதம்பர சக்கரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நர்த்தனம் புரியும் நாற்பத்தெண் கோணம்
வித்தாய் நின்ற மெய்ப்பொருளோனே
உத்தம குணத்தாய் உம்பர்கள் ஏறே
வெற்றிக் கொடியுடை வேளே போற்றி

பக்திசெய் தேவர் பயனே போற்றி
சித்தம் மகிழ்ந்திடச் செய்தவா போற்றி
அத்தன் அரி அயன் அம்பிகை லட்சுமி
வாணி யுடனே வரைமாக் கலைகளும்


தானே நானென்று சண்முகமாகத்
தாரணியுள்ளோர் சகலரும் போற்றப்
பூரண கிருபை புரிபவா போற்றி
பூதலத்துள்ள புண்ய தீர்த்தங்கள்

ஓதமார் கடல்சூழ் ஒளிர்புவி கிரிகளில்
எண்ணிலாத் தலங்கள் இனிதெழுந் தருள்வாய்
பண்ணும் நிஷ்டைகள் பலபல வெல்லாம்
கள்ளம் அபசாரம் கர்த்தனே எல்லாம்

எள்ளினுள் எண்ணெய் போலெழிலுடை உன்னை
அல்லும் பகலும் ஆசாரத்துடன்
சல்லாப மாய் உனைத் தானுறச் செய்தால்
எல்லா வல்லமை இமைப்பினில் அருளி

பல்லா யிரநூல் பகர்ந்தருள்வாயே
செந்தில்நகர் உறை தெய்வானை வள்ளி
சந்ததம் மகிழும் தயாபர குகனே
சரணம் சரணம் சரஹணபவ ஓம்

அரன்மகிழ் புதல்வா ஆறுமுகா சரணம்
சரணம் சரணம் சரஹணபவ ஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செந்தில் மேவும் சரவணன்

## கவசம் இரண்டு

**பிரமன், திருமால், சிவன், சரஸ்வதி, இலக்குமி, பார்வதி ஆகிய ஆறு சக்திகளும் இணைந்து ஒரே சக்தியாக - சக்திவேல் சண்முகனாக விளங்குவதால், ஆறுமுகத்துடன் கூடிய திருமுருகன் முன் அமர்ந்து இதைப் படிப்பது நல்லது. செவ்வாயன்றும், சஷ்டியிலும் இதைப் படிக்க வேண்டும். வம்ச விருத்தி, காரிய வெற்றி, நோய் நீக்கம், கிரக தோஷ நிவர்த்தி, அறிவு - செல்வ வளர்ச்சி, திருமணம் கைகூடுதல் போன்ற நன்மைகள் விளையும்.**

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சஷ்டருக்குதவும் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணியாட

மைய நடனஞ் செயும் மயில்வாகனனார்
கையில் வேலால் எனைக் காக்க என்று வந்து
வரவர வேலாயுதனார்! வருக!
வருக! வருக! மயிலோன்! வருக!

இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல்! வருக! வருக!
வாசவன் மருகா! வருக! வருக!
நேசக் குறமகள் நினைவோன்! வருக!

ஆறுமுகம் படைத்த ஐயா! வருக!
நீறிடும் வேலவன்! நித்தம் வருக!
சிரகிரி வேலவன்! சீக்கிரம் வருக!
சரவணபவனார்! சடுதியில் வருக!

ரவண பவச ரரரர ரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா! நமோ நம
நிபவ சரவண! நிற நிற நிறென

வசர வணபவ! வருக! வருக!
அசுரர் குடி கெடுத்த ஐயா! வருக!
என்னையாளும் இளையோன் கையில்
பன்னிரண்டாயுதம் பாசாங்குசமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரந்த விழிகள் பன்னிரண்டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன்! வருக!
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையும் கிலியும்

கிலியும் சௌவும் கிளரொளியையும்
நிலைபெற்றென் முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் நீயும் தனியொளியொவ்வும்
குண்டலியாம் சிவ குகன்! தினம் வருக!

ஆறுமுகமும் அணிமுடியாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்

ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல் பூஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்

முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழகுடைய திருவயிறுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீராவும்

இரு தொடை அழகும் இணை முழந்தாளும்
திருவடி அதனில் சிலப்பொலி முழுங்க
செககண செககண செககண செககண
மொகமொக மொகமொக மொகமொக மொகமொக

நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி

டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து

என்றனை ஆளும் ஏரகச் செல்வ!
மைந்தன் வேண்டும் வர மகிழ்ந்துதவும்
லாலா லாலா லாலா வேஷமும்
லீலா லீலா லீலா விநோதனென்(று)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் திருவடியை உறுதி என்றெண்ணும்
என் தலை வைத்துன் இணையடி காக்க!
என்னுயிர்க்குயிராம் இறைவன் காக்க!
பன்னிரு விழியால் பாலனைக் காக்க!

அடியேன் வதனம் அழகுவேல் காக்க!
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க!
கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க!
விழிசெவி இரண்டும் வேலவர்! காக்க!

நாசிகள் இரண்டும் நல்வேல் காக்க!
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க!
முப்பத்திரு பல் முனைவேல் காக்க!
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க!

கன்னம் இரண்டும் கதிர்வேல் காக்க!
என் இளங்கழுத்தை இனியவேல் காக்க!
மார்பை இரத்தின வடிவேல் காக்க!
சேரிள முலைமார் திருவேல் காக்க!

வடிவேல் இருதோள் வளம்பெறக் காக்க!
பிடரிகள் இரண்டும் பெருவேல் காக்க!
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க!
பழுபதினாறும் பருவேல் காக்க!

வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க!
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க!
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க!
ஆண்குறி இரண்டும் அயில்வேல் காக்க!

பிட்டம் இரண்டும் பெருவேல் காக்க!
வட்டக் குதத்தை வல்வேல் காக்க!
பணைத்தொடை இரண்டும் பருவேல் காக்க!
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க!

ஐவிரல் அடியிணை அருள்வேல் காக்க!
கைகள் இரண்டும் கருணைவேல் காக்க!
முன்கை இரண்டும் முரண்வேல் காக்க!
பின்கை இரண்டும் பின்னவள் இருக்க

நாவில் சரஸ்வதி நற்றுணையாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க!
முப்பால் நாடியை முனைவேல் காக்க!
எப்பொழுதும் எனை எதிர்வேல் காக்க!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க!
வரும் பகல் தன்னில் வச்ரவேல் காக்க!
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க!

ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க!
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்கக
காக்க! காக்க! கனகவேல் காக்க!
நோக்க நோக்க நொடியினில் நோக்க

தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாட்டிகப் பேய்கள்

அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராக்கதரும்

அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லினும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ(டு) அனைவரும்

விட்டாங்காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக்காரரும் சண்டாளர்களும்
என் பெயர் சொல்லவும் இடி விழுந்தோடிட
ஆனை அடியினில் அரும்பாவைகளும்

பூனை மயிரும் பிள்ளைகளென்பும்
நகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைகளுடனே பல கலசத்துடன்
மனையில் புதைத்த வஞ்சனை தனையும்

ஒட்டிய பாவையும் ஒட்டிய செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ்சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட

மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூதாள் எனைக் கண்டால் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய் விட்டலறி மதி கெட்டோடப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கால் கை முறிய
கட்டு கட்டு கதறிடக் கட்டு

முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகை சொக்கு
குத்து குத்து கூர் வடிவேலால்

பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலதுவாக
விடுவிடு வேலை வெருண்டது ஓட
புலியும் நரியும் புன்னரி நாயும்

எலியும் கரடியும் இனித்தொடர்ந்தோட
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துயரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க

ஒளிப்பும் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தம் வலிப்புப் பித்தம்
சூலை சயம் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி

பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்

நில்லாதோட நீ எனக்கருள்வாய்
ஈரேழ் உலகமும் எனக்குறவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணாள் அரசரும் மகிழ்ந்துற வாகவும்

உன்னைத் துதிக்க உன் திருநாமம்
சரவணபவனே! சைலொளிபவனே!
திரிபுரபவனே! திகழொளிபவனே!
பரிபுரபவனே! பவமொழிபவனே!

அரி திருமருகா! அமராபதியைத்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா! குகனே! கதிர் வேலவனே!
கார்த்திகை மைந்தா! கடம்பா! கடம்பனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடும்பனை அழித்த இனிய வேல் முருகா!
தணிகாசலனே! சங்கரன் புதல்வா!
கதிர்காமத்துறை கதிர் வேல் முருகா!
பழநிப்பதி வாழ் பால குமாரா!

ஆவினன் குடி வாழ் அழகிய வேலா!
செந்தில் மா மலையுறும் செங்கல்வராயா!
சமராபுரி வாழ் சண்முகத்தரசே!
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்

என் நா இருக்க யான் உனைப் பாட
எனைத் தொடர்ந்திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை

நேசமுடன் யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருளாக
அன்புடன் இரட்சி அன்னமும் சொன்னமும்

மெத்த மெத்தாக வேலாயுதனார்
சித்தி பெற்றடியேன் சிறப்புடன் வாழ்க!
வாழ்க! வாழ்க! மயிலோன் வாழ்க!
வாழ்க! வாழ்க! வடிவேல் வாழ்க!

வாழ்க! வாழ்க! மலைக்குரு வாழ்க!
வாழ்க! வாழ்க! மலைக்குற மகளுடன்
வாழ்க! வாழ்க! வாரணத் துவசம்
வாழ்க! வாழ்க! என் வறுமைகள் நீங்க

எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீ குரு பொறுப்ப(து) உன் கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவளாமே

பிள்ளை என்றன்பாய்ப் பிரியம் அளித்து
மைந்தன் என் மீதுன் மனம் மகிழ்ந்தருளித்
தஞ்சமென்றடியார் தழைத்திட அருள்செய்
கந்த சஷ்டி கவசம் விரும்பிய

பாலன் தேவராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசாரத்துடன் அங்கம் துலக்கி
நேசமுடன் ஒரு நினைவதுவாகிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தர் சஷ்டிக் கவசமிதனைச்
சிந்தை கலங்காது தியானிப்பவர்கள்
ஒரு நாள் முப்பத்தாறுருக் கொண்டு
ஓதியே ஜெபித்து உகந்து நீறணிய

அஷ்ட திக்குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசை மன்னர் எண்மர் சேர்ந்தங்கருளுவர்
மாற்றலர் எல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை அளித்திடும்

நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டா வாழ்வர்
கந்தர் கை வேலாம் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்

விழியால் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லாதவரைப் பொடிப் பொடியாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்காரத்தடி

அறிந்தெனதுள்ளம் அஷ்ட லட்சுமிகளில்
வீர லட்சுமிக்கு விருந்துணவாகச்
சூரபத்மாவைத் துணித்தகை அதனால்
இருபத்தேழ்வர்க்(கு) உவந்(து) அமுதளித்த

குருபரன் பழனிக் குன்றினிலிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி!
எனைத் தடுத்தாட்கொள என்றனதுள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா! போற்றி!

தேவர்கள் சேனாதிபதியே! போற்றி!
குறமகள் மனமகிழ் கோவே! போற்றி!
திறமிகு திவ்விய தேகா! போற்றி!
இடும்பாயுதனே இடும்பா! போற்றி!

கடம்பா! போற்றி! கந்தா! போற்றி!
வெட்சி புனையும் வேலே! போற்றி!
உயர்கிரி கனகசபைக்கோர் அரசே!
மயில் நடமிடுவோய் மலரடி சரணம்!

சரணம்! சரணம்! சரவண பவ ஓம்!
சரணம்! சரணம்! சண்முகா! சரணம்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழநிப் பதியொளிர் பரமன்

## கவசம் மூன்று

செவ்வாய் திசையில் நற்பலன் விளையவும், செவ்வாய் கெட்டிருந்து அதனால் ஏற்படும் கேடுகள் நீங்கவும், பழநி முருகனாம் கண்டாரக் கோலத்தைப் படிக்க வேண்டிய கவசம் இது. இதைப் படிப்பதால் நோய் நீங்கும், கண்திட்டி அகலும், சொல்வளமும், புலமையும் உண்டாகும்.

திருவாவினன்குடி சிறக்கும் முருகா
குருபரா குமரா குழந்தைவே லாயுதா
சரவணை சண்முகா சதாசிவன் பாலா
இரவலர் தயாபரா ஏழைபங் காளா

பரமேஸ் வரிக்குப் பாலா தயாபரா
வரமெனக் (கு) அருள்வாய் வாமனன் மருகா
இரண்டா யிரம் வெள்ளம் யோகம் படைத்தவா
திரண்டா ருகமனம் தீர்க்கம் படைத்தவா

இலட்சத்திருநான்கு நற்றம்பி மாருடன்
பட்சத்துடனே பராசக்தி வேலதாய்
வீர வாகு மிகுதள கர்த்தனாய்
சூர சங்காரா துஷ்ட நிஷ்டூரா

கயிலாய மேவும் கனக சிம்மாசனா
மயிலேறும் சேவகா வள்ளி மனோகரா
அகத்திய மாமுனிக் (கு) அருந்தமிழ் உரைத்தவா
சுகத்திரு முறுகாற் றுப்படை சொல்லிய

நக்கீரன் நற்றமிழ் நலமென வினவிக்
கைக்கீழ் வைக்கும் கனமிசைக் குதவா
திருவருணகிரி திருப்புகழ் பாட
இரும்புகழ் நாவில் எழுதிப் புகழ்ந்தவா

ஆயிரத்தெட்டாம் அருள்சிவ தலத்தில்
பாயிரம் தோத்திரம் பாடப் புகழ்ந்தவா
எண்ணா யிரம் சமண் எதிர்கழு வேற்றி
விண்ணோர் குமாரன் வியாதியைத் தீர்த்தவா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருவாம் பிரமனைக் கொடும்சிறை வைத்தே
உருபொருள் வேதம் உரைத்தாய் சிவனுடன்
கருதிமெய் யோகம்சொல்லியது ஒருமுகம்
அருள்பெறு மயில்மீ (து) அமர்ந்த (து) ஒருமுகம்

வள்ளிதெய் வானையை மருவிய (து) ஒருமுகம்
தெள்ளுநான்முகன் போல் சிருட்டிப்ப (து) ஒருமுகம்
சூரனை வேலால் துணித்த (து) ஒருமுகம்
ஆரணம் ஓதும் அருமறை யடியார்

தானவர் வேண்டுவ தருவ (து) ஒருமுகம்
ஞானமுதல்வருக்கு நற்பிள்ளை பழநி
திருப்பரங் கிரிவாழ் தேவா நமோ நம
பொருட் செந்தில் அம்பதி புரப்பாய் நமோ நம

ஏரகம் தனில்வாழ் இறைவா நமோநம
கூரகம் ஆவினன்குடியாய் நமோநம
சர்வ சங்கரிக்குத் தனயா நமோநம
உறுசோலைமலைமேல் உகந்தாய் நமோநம

எல்லாக்கிரிக்கும் இறைவா நமோ நம
சல்லாப மாக சண்முகத்துடனே
எல்லாத் தலமும் இனிதெழுந்தருளி
உல்லாசத்துறும் ஓங்கார வடிவே

மூல வட்டத்தில் முளைத்தெழும் ஜோதியை
சாலமுக்கோணத் தந்தமுச் சக்தியை
வேலாயுதமுடன் விளங்கும் குகனைச்
சீலமார் வயலூர்ச் சேந்தனைத் தேவனை

கைலாச மேருவாகாசத்தில் கண்டு
பைலாம் பூமியும் பங்கய பார்வதி
மேலும் பகலும் விண்ணுரு வேத்தி
நாற்கோணத்தில் நளினமாய் அர்ச்சனை

கங்கையீசன் கருதிய நீர்புரை
செங்கண்மால் திருவும் சேர்ந்துசெய் அர்ச்சனை
அக்கினி நடுவே அமர்ந்த ருத்திரன்
முக்கோண வட்டம் முதல்வாயு ருத்திரி
வாய் அறுகோணம் மகேசுவரன் மகேசுவரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயும் கருநெல்லி வெண்சாரைதன்மேல்
ஆகாச வட்டத் (து) அமர்ந்த சதாசிவன்
பாகமாம் வெண்மைப் பராசக்தி கங்கை

தந்திர அர்ச்சனை தலைமேல்கொண்டு
மந்திர மூலத்தில் வாசியைக்கட்டி
அக்கினி குதிரை ஆகாசத்தேவி
மிக்கமாய்க் கருநெல்லிவெண்சாரை உண்பவர்

பாகமாய் ரதமும் பகல்வழியாவர்
சாகாவகையும் தன்னை அறிந்து
ஐந்து ஜீவனுடன் ஐயஞ்சு கற்பமும்
விந்தை உமைசிவன் மேன்மையும் காட்டி

சந்திர சூரியர் தம்முடன் அக்கினி
அந்திரனைக்கண் (டு) அறிந்தே யிடமாய்ச்
சிந்தையுள் ஏற்றுச் சிவசம்பு தன்னை
மந்திர அர்ச்சனை வாசிவ என்று

தேறுமுகம் சென்னி சிவகிரி மீதில்
ஆறுமுகமாய் அகத்துளே நின்று
வாசல் ஒன்பதையும் வளமுடன் வைத்து
யோசனை ஐங்கரன் உடன் விளையாடி

மேலைக்கருநெல்லி வெண்சாரை உண்டு
வாலைக்குழந்தை வடிவையும் காட்டி
நரைதிரை மாற்றி நாலையும் காட்டி
உரைசிவ யோகம் உபதேசம் செப்பி

மனத்தில்பிரியா வங்கண மாக
நினைத்தபடிஎன் நெஞ்சத்திருந்து
அதிசயம் என்றுன் அடியார்க் (கு) இரங்கி
மதியருள் வேலும் மயிலுடன் வந்து

நானே நீயெனும் லட்சணத் துடனே
தேனே என்னுளம் சிவகிரி எனவே
ஆறா தாரத்து ஆறு முகமும்
மாறாதிருக்கும் வடிவையும் காட்டி
கனவிலும் நனவிலும் கண்டுனைத் துதிக்கத்
தனதென வந்து தயவுடன் இரங்கிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கொடு சக்கரம் சண்முக தரிசனம்
எங்கு நினைத்தாலும் என்முன் னே வந்து

அஷ்டாவ தானம் அறிந்துடன் சொல்லத்
தட்டாத வாக்கும் சர்வா பரணமும்
இலக்கணம் இலக்கியம் இசையறிந் துரைக்கத்
துலக்கிய காவியம் சொற்பிரபந்தம்

எழுத்துச் சொற்பொருள் யாப்பலங்காரம்
வாழ்த்தும் என் நாவில்வந்தினி திருந்தே
அமுத வாக்குடன் அடியார்க்கு வாக்கும்
சமுசார சாரமும் தானே நிசமென

வச்சிர சரீரம் மந்திர வசீகரம்
அட்சரம் யாவும் அடியேனுக்குதவி
வல்லமை யோகம் வசீகர சக்தி
நல்ல உன் பாதமும் நாடியபொருளும்

சகலகலை ஞானமும் தானெனக் கருளிச்
செகதல வசீகரம் திருவருள் செய்து
வந்த கலிபிணி வல்வினை மாற்றி
இந்திரன் தோகை எழில்மயில் ஏறிக்

கிட்டவேவந்து கிருபை பாலிக்க
அட்டதுட் டமுடன் அனேக மூர்க்கமாய்
துட்டதே வதையும் துட்டப் பிசாசும்
வெட்டுண்ட பேயும் விரிசடை பூதமும்

வேதாளம் கூளிவிடும்பில்லி வஞ்சனை
பேதாளம் துன்பப் பிசாசுகள் நடுங்க
பதைபதைத்தஞ்சிடப் பாசத்தால் கட்டி
உதைத்து மிதித் (து) அங்கு உருட்டி நொறுக்கிச்

சூலத்தால் குத்தித் தூளுதூளுருவி
வேலா யுதத்தால் வீசிப்பருகி
மழுவிட்டேவி வடவாக்கினி போல்
தழுவிஅக் கினியாய்த் தானே எரித்துச்
சிதம்பர சக்கரம் தேவி சக்கரம்
மதம்பெறும் காளி வல்ல சக்கரம்
மதியணி சம்பு சதாசிவ சக்கரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிகர்ம வீரபத்திரன் சக்கரம்


திருவைகுண்டம் திருமால் சக்கரம்
அருள்பெருந் திகிரி அக்கினி சக்கரம்
சண்முக சக்கரம் தண்டா யுதத்தால்
விம்ம அடிக்கும் எல்லாச் சக்கரமும்

ஏக ஷரூபமாய் என்முன்னே நின்று
வாகனத் துடன் என் மனத்தில் இருந்து
தம்பனம் மோகனம் தயவாம் வசீகரம்
இம்பமா கருடணம் மேவும் உச் சாடனம்

வம்பதாம் பேதானம் வலிதரு (ம்) மாரணம்
உம்பர்கள் ஏத்தும் உயிர்வித் வேடனம்
தந்திர மந்திரம் தருமணி அட்சரம்
உந்தன் விபூதி உடனே செபித்துக்

கந்தனின் தோத்திரம் கவசமாய்க் காக்க
எந்தன் மனத்துள் ஏதுவேண் டியதும்
தந்துரட் சித்தருள் தயாபரா சரணம்
சந்தம் எனக்கருள் சண்முகா சரணம்

சரணம் சரணம் சட்கோண இறைவா
சரணம் சரணம் சத்துரு சங்காரா
சரணம் சரணம் சரவணபவ ஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவேரகத்துறை பெருமான்

## கவசம் நான்கு

**அறிவுத் தெளிவையும், நினைவாற்றலையும் தரவல்ல இக்கவசத்தைக் குழந்தைகளுக்குச் சொல்லி வைத்து, வியாழனன்று கல்வியைத் துவங்குமுன் படிக்கச் செய்தல் நலம், அவர்கள் அறிவுடன் கூடிய நிலையான பொருட் செல்வம் பெற்றுத் திகழ்வார்கள்.**

ஓமெனும் பிரணவம் உரைத்திடச் சிவனார்
காமுற உதித்த கனமறைப் பொருளே
ஓங்கா ரமாக உதயத் தெழுந்தே
ஆங்கா ரமான அரக்கர் குலத்தை

வேரறக் களைந்த வேலவா போற்றி
தேராச் சூரரைத் துண்டதுண் டங்களாய்
வேலா யுதத்தால் வீசி அறுத்த
பாலா போற்றி பழநியின் கோவே

நான்கு மறைகள் நாடியே தேடும்
மான் மருகோனே வள்ளி மணாளனே
நானெனும் ஆணவம் நண்ணிடா (து) என்னை
காணநீ வந்து காப்பதுன் கடனே

காளி கூளி கங்காளி ஓங்காரி
சூலி கபாலி துர்க்கை யேமாளி
போற்றும் புதல்வா புனித குமாரா
சித்தர்கள் போற்றும் தேசிகா போற்றி

;ஏகாட்சரமாய்" எங்கும் தானாகி
வாகாய் நின்ற மறைமுதல் பொருளே
"துவியட் சரத்தால்" தொல்லுல (கு) எல்லாம்
அதிசயமாக அமைத்தவா போற்றி

"திரியட் சரத்தால்" சிவனயன் மாலும்
விரிபா ருலகில் மேன்மையுற் றவனே
"சதுரட் சரத்தால்" சாற்றுநல் யோகம்
மதுரமாய் அளிக்கும் மயில்வா கனனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பஞ்சாட் சரத்தால்" பரமன் உருவதாய்த்
தஞ்சமென் றோரைத் தழைத்திடச் செய்தென்
நெஞ்சகத் (து) இருக்கும் நித்தனே சரணம்
அஞ்சலி செய்த அமரரைக் காக்கும்

ஆறு கோணமாய் ஆறெழுத் தாகி
ஆறு சிரமும் அழகிய முகமும்
ஆறிரு செவியும் அகன்ற மார்பும்
ஆறிரு கண்ணும் அற்புத வடிவும்

சரவணை வந்த சடாட்சரப் பொருளே
அரனயன் வாழ்த்தும் அப்பனே கந்தா
கரங்கள்பன் னிரண்டில் கதிரும்ஆ யுதத்தால்
தரங்குலைந் (து) ஓடத் தாரகா சுரன்முதல்

வேரறச் சூர்க்குலம் முடித்து மகிழ்ந்தாய்
சீர்த் திருச் செந்தூர்த் தேவசே னாபதி
அஷ்ட குலாசலம் யாவையும் ஆகி
இஷ்டசித் திகளருள் ஈசன் புதல்வா

துட்டசங் காரா சுப்பிர மண்யா
மட்டிலா வடிவே வையாபுரித் துரையே
எண்கோ ணத்துள் இயங்கிய நாரணன்
கண்கொளாக் காட்சி காட்டிய சடாட்சர

சைவம் வைணவம் சமரச மாகத்
தெய்வமாய் விளங்கும் சரவண பவனே
சரியை கிரியை சார்ந்தநல் யோகம்
இரவலர்க் (கு) அருளும் ஈசா போற்றி

ஏதுசெய் திடினும் என்பால் இரங்கிக்
கோதுகள் இல்லாக் குணமெனக் கருளித்
தரிசனம் கண்ட சாதுவோ (டு) உடன்யான்
அருச்சனை செய்ய அனுக்ரகம் செய்வாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பில்லிவல் வினையும் பீனிச மேகம்
வல்ல பூதங்கள் மாயமாய்ப் பறக்க
அல்லலைப் போக்கிநின் அன்பரொ (டு) என்னைச்
சல்லாப மாகச் சகலரும் போற்ற

கண்டு களிப்புறக் கருணை அருள்வாய்
அண்டர் நாயகனே அருமறைப் பொருளே
குட்டிச் சாத்தான் குணமிலா மாடன்
தட்டிலா இருளன் சண்டிவே தாளம்

சண்டமா முனியும் தக்கராக் கதரும்
மண்டை வலியொடு வாதமும் குன்மமும்
சூலைகா மாலை சொக்கலும் சயமும்
மூலரோ கங்கள் முடக்குள் வலிப்பு

திட்டு முறைகள் தெய்வத சாபம்
குட்டம் சோம்பல் கொடிய வாந்தியும்
கட்டிலாக் கண்ணோய் கண்ணேறு முதலா
வெட்டுக் காயம் வெவ்விடம் அனைத்தும்

உன்னுடை நாமம் ஓதியே நீறிடக்
கன்னலொன் றதனில் களைந்திடக் கருணை
செய்வதுடன் கடனே செந்தில் நாயகனே
தெய்வநா யகனே தீரனே சரணம்

சரணம் சரணம் சரஹண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குன்றுதோறாடும் குமரவேள்

### கவசம் ஐந்து

**ஐங்கோணத்தில் அமைந்த மாக்கோலத்தின் நடுவில் திருவிளக்கேற்றி வைத்து, பூ, தூபதீப நைவேத்தியங்கள் படைத்து, அதன் முன் அமர்ந்து இதனைப் படித்தால், சகல காரிய சித்தி கிடைக்கும், குடும்ப பீடை விலகும், தனம் பெருகும், புகழ் கிடைக்கும், வியாழன், பரணி, கார்த்திகை விசாக நாட்களில் படிப்பது மிக நல்லது.**

கணபதி துணைவா கங்காதரன் புதல்வா
குணவதி உமையாள் குமர குருபரா
வள்ளிதெய் வானை மருவிய நாயகா
துள்ளிமயி லேறும் சுப்பிர மணியா

அழகொளிப் பிரபை அருள்வடி வேலா
பழநி நகரில் பதியனு கூலா
திருவா வினன்குடி சிறக்கும் முருகா
அருள்சேர் சிவகிரி ஆறு முகவா

சண்முகநதியும் சராபன்றி மலையும்
பன்முகம் நிறைந்த பழனிக்கு இறைவா
ஆறாறு நூற்று அட்டமங் களமும்
வீரவை யாபுரி விளங்கும் தயாபரா

ஈராறு பழநி எங்கும் தழைக்கப்
பாராறு சண்முகம் பகரும் முதல்வா
ஆறு சிரமும் ஆறு முகமும்
ஆறிரு புயமும் ஆறிரு காதும்

வடிவம் சிறந்த மகரகுண் டலமும்
தடித்த பிரபைபோல் சார்ந்த சிந்தூரமும்
திருவெண் ணதீறணி திருநுதல் அழகும்
கருணைபொழியும் கண்ணான்கு மூன்றும்

குனித்த புருவமும் கூரிய மூக்கும்
கனித்த மதுரித்த கனிவாய் இதழும்
வெண்ணிலாப் பிரபைபோல் விளங்கிய நகையும்
எண்ணிலா அழகாய் இலங்குபல் வரிசையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரிகை உமையாள் களித்தே இனிதெனச்
சீர்தரும் வள்ளி தெய்வநா யகியாள்
பார்த்தழ கென்னப் பரிந்த கபோலமும்
வார்த்த கனகம்போல் வடிவேல் ஒளியும்

முறுக்குமேல் மீசையும் மூர்க்கம் சிறக்க
மறுக்கும் சூரர்மேல் வாதுகள் ஆட
ஈஸ்வரன் பார்வதி எடுத்து முத்தாடி
ஈஸ்வரன் வடிவை மிகக்கண் டனுதினம்

கையால் எடுத்து கனமார் (பு) அணைத்தே
ஐயா! குமரா! அப்பனே! என்று
மார்பினும் தோளினும் மடியினும் வைத்துக்
கார்த்திகே யாஎனக் கருணையால் கொஞ்சி

முன்னே கொட்டி முருகா! வருகவென் (று)
அந்நேரம் வட்டமிட்டாடி விளையாடித்
தேவியும் சிவனும் திருக்கண் களிகூரக்
கூவிய மயிலேறும் குருபரா வருக

தாவிய தகரேறும் சண்முகா வருக
ஏவியவே லேந்தும் இறைவா வருக
கூவிய சேவல் கொடியோய் வருக
பாவலர்க் கருள்சிவ பாலனே வருக

அன்பர்க் கருள்புரி ஆறுமுகா வருக
பொன்போல் சரவணைப் புண்ணியா வருக
அழகில் சிவனொளி அய்யனே வருக
கலபம் அணியுமென் கந்தனே வருக

மருமலர்க் கடம்பணி மார்பா வருக
மருவுவோர் மலரணி மணியே வருக
திரிபுர பவனெனும் தேவே வருக
பரிபுர பவனெனும் பவனே வருக

சிவகிரி வாழ்தெய்வ சிகாமணி வருக
காலில் தண்டை கலீர் கலீரென
சேலில்சதங்கை சிலம்பு கலீரென
இடும்பனை மிதித்ததோர் இலங்கிய பாதமும்
அடும்பல வினைகளை அகற்றிய பாதமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவகிரி மீதினில் திருநிறை கொலுவும்
நவகிரி அரைமேல் இரத்தினப் பிரபையும்
தங்கரை ஞாணும் சாதிரை மாமணி

பொங்குமாந் தளிர்சேர் பொற்பீதாம் பரமும்
சந்திர காந்தச் சரிகைத் தொங்கலும்
மந்திரவாளும் வங்கிச் சரிகையும்
அருணோ தயம்போல் அவிர்வன் கச்சையும்

ஒருகோடி சூரியன் உதித்த பிரபை போல்
கருணையால் அன்பரைக் காத்திடும் அழகும்
இருகோடி சந்திரன் எழிலொட்டி யாணமும்
ஆயிரம் பணாமுடி அணியுமா பரணமும்

வாயில்நன் மொழியாய் வழங்கிய சொல்லும்
நாபிக் கமலமும் நவரோம பந்தியும்
மார்பில் சவ்வாது வாடை குபீரென
புனுகு பரிமளம் பொருந்திய புயமும்

ஒழுகிய சந்தனம் உயர்கஸ்தூரியும்
வலம்புரி சங்கொலி மணியணி மிடறும்
நலம்சேர் உருத்திர அக்க மாலையும்
மாணிக்கம் முத்து மரகதம் நீலம்

ஆணிவை டூரியம் அணிவைரம் பச்சை
பவளகோ மேதகம் பதித்தவச் ராங்கியும்
நவமணி பிரபைபோல் நாற்கோடி சூரியன்
அருணோ தயமெனச் சிவந்த மேனியும்

கருணைபொழியும் கடாட்சவீட் சணமும்
கவசம் தரித்தருள் காரண வடிவும்
நவவீரர் தம்முடன் நற்காட்சி யான
ஒருகை வேலாயுதம் ஒருகை சூலாயுதம்

ஒருகை நிறைசங்கு ஒருகை சக்ராயுதம்
ஒருகை நிறைவில்லு ஒருகை நிறையம்பு
ஒருகை மந்திரவாள் ஒருகை மாமழு
ஒருகை மேல்குடை ஒருகை தண்டாயுதம்
ஒருகை சந்திராயுதம் ஒருகை வல்லாயுதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கையில் பிடித்த ஆயுதம் அளவிலாப்
பங்கயக் கமலப் பன்னிரு தோளும்
முருக்கம் சிறக்கும் முருகா சரவணை

இருக்கும் குருபரா ஏழைபங் காளா
வானவர் முனிவர் மகிழ்ந்துகொண் டாடத்
தானவர் அடியர் சகலரும் பணியப்
பத்திர காளி பரிவது செய்ய

சக்திகள் எல்லாம் தாண்டவ மாட
அஷ்ட பைரவர் ஆனந்தமாட
துஷ்டமிகுஞ் சூளிகள் சூழ்திசை காக்க
சத்த ரிஷிகள் சாந்தக மென்னச்

சித்தர்கள் நின்று சிவசிவா என்னத்
தும்புரு நாரதர் சூரிய சந்திரர்
கும்பமா முனியும் குளிர்ந்ததா ரகையும்
அயன்மால் உருத்திரன் அஷ்ட கணங்கள்

நயமுடன் நின்று நாவால் துதிக்க
அஷ்ட லஷ்மி அம்பிகை பார்வதி
கட்டழகன் என்று கண்டுனை வாழ்த்த
இடும்பா யுதன்நின் இணையடி பணிய

ஆடும் தேவகன்னி ஆலத்தி எடுக்க
தேவ கணங்கள் ஜெயஜெய என்ன
ஏவல் கணங்கள் இந்திரர் போற்ற
கந்தர்வர் பாடிக் கவரிகள் வீசிச்

சார்ந்தனம் என்னச் சார்வரும் அநேக
பூதம் அடிபணிந் தேத்தவே தாளம்
பாதத்தில் வீழ்ந்து பணிந்துகொண் டாட
அரகர என்றடியார் ஆலவட்டம் பிடிக்க

குருபரன் என்றன்பர் கொண்டாடி நிற்க
குடையும் சேவலின் கொடியும் சூழ
இடை விடாமல் உன் ஏவலர் போற்றச்
சிவனடி யார்கள் திருப்பாத மேந்த

நவமெனும் நால்வரை ஏற்ற சரமண்டலம்
உருத்திர வீணை நாதசுர மேளம்
தித்திமி என்று தேவர்கள் ஆடச்
சங்கீத மேளம் தாளம் துலங்க
மங்கள மாக வைபவம் இலங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவ முரசடிக்கத் தினமேள வாத்தியம்
சேவல் கொடியும் சிறப்புடன் இலங்க
நந்திகே சுவரன்மீது ஏறிய நயமும்

வந்தனம் செய்ய வானவர் முனிவர்
எங்கள் பார்வதியும் ஈசனும் முன்வர
ஐங்கரன் முன்வர ஆறுமா முகவன்
வீரமயி லேறி வெற்றிவேல் எடுத்துச்

சூரன்மேல் ஏவத் துடித்தவன் மடியச்
சிங்கமுகா சுரன் சிரமது உருளத்
துங்கக் கயமுகன் சூரனும் மாள
அடலறக் குலத்தை அறுத்துச் சயித்து

விடுத்தவே லாயுதம் வீசிக்கொக் கரித்துத்
தம்ப மெனும் சயத் தம்பம் நாட்டி
அன்பர்கள் தம்மை அனுதினம் காத்துத்
திருப்பரங் குன்றம் சீர்பதி செந்தூர்

திருவாவி நன்குடி திருவே ரகமும்
துய்ய பழநி சுப்பிர மணியன்
மெய்யாய் விளங்கும் விராலிமலைமுதல்
அண்ணா மலையும் அருள்மேவும் கயிலை

கண்ணிய மாவூற்றுக் கழுகுமா மலையும்
முன்னிமை யோர்கள் முனிவர் மனத்திலும்
நன்னய மாய்ப்பணி நண்பர் மனத்திலும்
கதிர்காமம் செங்கோடு கதிர்வேங் கடமும்

பதினா லுகத்திலும் பக்தர் மனத்திலும்
எங்கும் தானவ னாயிருந் (து) அடியர்தம்
பங்கி லிருந்து பாங்குடன் வாழ்க
கேட்ட வரமும் கிருபைப் படியே

தேட்ட முடன் அருள் சிவகிரி முருகா
நாட்டு சிவயோகம் நாடிய பொருளும்
தாட்டிக மாய்எனக் (கு) அருள்சண் முகனே

சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழமுதிர்ச்சோலை மலைக் கிழவோன்

## கவசம் ஆறு

புலமைமிக்க மக்களைப் பெற விரும்புவோர் படிக்க வேண்டிய கவசம் இது. ஆறுமுகக் கோலத்துடன் அமைந்த திருமுருகன் முன்பு குழந்தைகளை அமரச் செய்து, அவர்கள் காதில் விழும் வண்ணம் வாய்விட்டு இதனைப் படிக்க வேண்டும். அந்தக் குழந்தைகள் பெரும் புலமையும், புகழும் பெற்றுத் திகழ்வர், அவர்கள் பசியும் பஞ்சமும் இல்லாமல், வளத்தோடு வாழ்வார்கள்

சங்கரன் மகனே சரவண பவனே
ஐங்கரன் துணைவனே அமரர்தம் கோனே
செங்கண்மால் மருகனே தெய்வானை கேள்வனே
பங்கயம் போன்ற பன்னிரு கண்ணனே

பழநி மாமலையுறும் பன்னிரு கரத்தனே
அழகுவேல் ஏந்தும் ஐயனே சரணம்
சரவணபவனே சட்கோணத் துள்ளுறை
அரனருள் சுதனே அய்யனே சரணம்

சயிலொளி பவனே சடாட்சரத் தோனே
மயில்வா கனனே வள்ளலே சரணம்
திரிபுர பவனே தேவசே னாபதி
குறமகள் மகிழும் குமரனே சரணம்

திகழொளி பவனே சேவல்கொடியாய்
நகமா யுதமுடை நாதனே சரணம்
பரிபுர பவனே பன்னிரு கையனே
தருணமிவ் வேளை தற்காத் தருளே

சவ்வும் ரவ்வுமாய்த் தானே யாகி
வவ்வும் ணவ்வுமாய் விளங்கிய குகனே
பவ்வும் வவ்வுமாய் பழமுதிர் சோலையில்
தவ்வியே ஆடும் சரவணபவனே

குஞ்சரி வள்ளியைக் குலாவி மகிழ்வோய்
தஞ்ச மென்றுன்னைச் சரணம் அடைந்தேன்
கொஞ்சிய உமையுடன் குழவியாய்ச் சென்றங் (கு)
அஞ்சலி செய்தவள் அமுதமும் உண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார்த்திகை மாதர் கனமார் (பு) அமுதமும்
பூர்த்தியாய் உண்ட புனிதனே குகனே
நவமைந்தர் சிவனால் நலமுடன் உதிக்கத்
தவமுடை வீரவாகுவோ (டு) ஒன்பான்

தம்பிமா ராகத் தானையைக் கொண்ட
சம்பிர தாயா சண்முகா வேலா
நவவீரர் தம்முடன் நவகோடி வீரரும்
கவனமாய் உருத்திரன் அளித்தே களித்துப்

பேதம் இல்லாமல் பிரமனைக் குருவாய்
ஓதிடச் செய்ய உடன் அவ் வேதனை
ஓமெனும் பிரணவத் துண்மைநீ கேட்க
தாமே யோசித்த சதுர்முகன் தன்னை

அமரர்கள் எல்லாம் அதிசயப் படவே
மமதைசேர் அயனை வன்சிறை யிட்டாய்
விமலனும் கேட்டு வேக மதாக
உமையுடன் வந்தினி துவந்து பரிந்து

அயனைச் சிறைவிடென் (று) அன்பாய் உரைக்க
நயமுடன் விடுத்த ஞானபண் டிதனே
திருமால் அயன்சிவன் சேர்ந்து மூவரும்
கௌரி லட்சுமி கலைம களுடனே

அறுவரோர் அம்சமாய் அரக்கரை வெல்ல
ஆறு முகத்துடன் அவதரித் தோனே
சிங்க முகாசுரன் சேர்ந்த கயமுகன்
பங்கமே செய்யும் பானு கோபனும்

சூரனோ டொத்த துட்டர்க ளோடு
கோரமே செய்யும் கொடியராக் கதரை
வேருடன் கெல்லி விண்ணவர் துன்பம்
ஆறிடச் செய்தவ் வமரர்கள் தமக்குச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேனா பதியாய்த் தெய்வீக பட்டமும்
தானாய்ப் பெற்ற தாட்டிகப் பெருமானே
திருப்பரங் குன்றம் செந்தூர் முதலாய்ச்
சிறப்புறு பழநி திருவேரக முதல்

எண்ணிலாத் தலங்களில் இருந்தாடும் குகனே
விண்ணவர் ஏத்தும் விநோத பாதனே
அன்பர்கள் துன்பம் அகற்றியாள் பவனே
தஞ்சமென் (று) ஓதினார் சமயம் அறிந்தங் (கு)


இன்பம் கொடுக்கும் ஏழைபங் காளா
கும்பமா முனிக்குக் குருதே சிகனே
தேன்பொழில் பழனி தேவ குமாரா
கண்பார்த் (து) எனையாள் கார்த்திகே யாஎன்

கஷ்டநிஷ் டூரம் கவலைகள் மாற்றி
அஷ்டலட் சுமிவாழ் அருளெனக் குதவி
இட்டமாய் என்முன் இருந்து விளையாடத்
திட்டமாய் எனக்கருள் செய்வாய் குகனே

அருணகிரி தனக் (கு) அருளிய தமிழ்போல்
கருணையால் எனக்கு கடாட்சித் தருள்வாய்
தேவ ராயன் செப்பிய கவசம்
பூவல யத்தோர் புகழ்ந்து கொண்டாட

சஷ்டி கவசம் தான்செபிப் போரைச்
சிஷ்டராய்க் காத்தருள் சிவகிரி வேலா
வந்தென் நாவில் மகிழ்வுடன் இருந்து
சந்தத் தமிழ்த் திறம் தந்தருள் வோனே

சரணம் சரணம் சரஹண பவஓம்
சரணம் சரணம் தமிழ் தரும் அரசே
சரணம் சரணம் சங்கரன் சுதனே
சரணம் சரணம் சண்முகா சரணம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் அருளிய

# கந்தர் அநுபூதி



## காப்பு

**நெஞ்சக் கன கல்லு நெகிழ்ந்து உருகத்**
**தஞ்சத்து அருள் சண்முகனுக்கு இயல்சேர்**
**செஞ்சொற் புனை மாலை சிறந்திடவே**
**பஞ்சக்கர ஆனை பதம் பணிவாம்.**

## நூல்

(1) ஆடும் பரி, வேல், அணிசேவல் எனப்
பாடும் பணியே பணியா அருள்வாய்
தேடும் கயமா முகனைச் செருவில்
சாடும் தனி யானைச் சகோதரனே.

(2) உல்லாச, நிராகுல, யோக இதச்
சல்லாப, விநோதனும் நீ அலையோ?
எல்லாம் அற, என்னை இழந்த நலம்
சொல்லாய், முருகா சுரபூ பதியே.

(3) வானோ? புனல் பார் கனல் மாருதமோ?
ஞானோ தயமே□? நவில் நான் மறையோ?
யானோ? மனமோ? எனை ஆண்ட இடம்
தானோ? பொருளாவது சண்முகனே.

(4) வளைபட்ட கைம் மாதொடு, மக்கள் எனும்
தளைபட்டு அழியத் தகுமோ? தகுமோ?
கிளைபட்டு எழு சூர் உரமும், கிரியும்,
தொளைபட்டு உருவத் தொடு வேலவனே.

(5) மக மாயை களைந்திட வல்ல பிரான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகம் ஆறும் மொழிந் தொழிந்திலனே
அகம் மாடை, மடந்தையர் என்(று) அயரும்
சகமாயையுள் நின்று தயங்குவதே.

(6) திணியான மனோ சிலை மீது, உனதாள்
அணியார், அரவிந்தம் அரும்பு மதோ?
பணியா? என, வள்ளி பதம் பணியும்
தணியா அதிமோக தயா பரனே.

(7) கெடுவாய் மனனே, கதி கேள், கரவாது
இடுவாய், வடிவேல் இறைதாள் நினைவாய்
சுடுவாய் நெடு வேதனை தூள்படவே
விடுவாய் விடுவாய் வினை யாவையுமே.

(8) அமரும் பதி, கேள், அகம் ஆம் எனும் இப்
பிமரம் கெட மெய்ப் பொருள் பேசியவா
குமரன் கிரிராச குமாரி மகன்
சமரம் பெரு தானவ நாசகனே.

(9) மட்டூர் குழல் மங்கையர் மையல் வலைப்
பட்டு, ஊசல்படும் பரிசு என்று ஒழிவேன்?
தட்டு ஊடு அற வேல் சயிலத்து எறியும்
நிட்டூர நிராகுல, நிர்பயனே.

(10) கார் மா மிசை காலன் வரில், கலபத்
தேர்மா மிசை வந்து, எதிரப் படுவாய்
தார் மார்ப, வலாரி தலாரி எனும்
சூர்மா மடியத் தொடுவே லவனே.

(11) கூகா என என் கிளை கூடி அழப்
பேகா வகை, மெய்ப்பொருள் பேசியவா
நாகாசல வேலவ நாலு கவித்
தியாகா சுரலோக சிகாமணியே.

(12) செம்மான் மகளைத் திருடும் திருடன்
பெம்மான் முருகன், பிறவான், இறவான்
சும்மா இரு, சொல் அற .. என்றலுமே
அம்மா பொருள் ஒன்றும் அறிந்திலனே.

(13) முருகன், தனிவேல் முனி, நம் குரு ... என்று
அருள் கொண்டு அறியார் அறியும் தரமோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரு அன்று, அரு அன்று, உளது அன்று, இலது அன்று,
இருள் அன்று, ஒளி அன்று என நின்றதுவே.

(14) கைவாய் கதிர்வேல் முருகன் கழல்பெற்று
உய்வாய், மனனே, ஒழிவாய் ஒழிவாய்
மெய் வாய் விழி நாசியொடும் செவி ஆம்
ஐவாய் வழி செல்லும் அவாவினையே.

(15) முருகன், குமரன், குகன், என்று மொழிந்து
உருகும் செயல் தந்து, உணர்வு என்று அருள்வாய்
பெரு புங்கவரும், புவியும் பரவும்
குருபுங்கவ, எண் குண பஞ்சரனே.

(16) பேராசை எனும் பிணியில் பிணிபட்டு
ஓரா வினையேன் உழலத் தகுமோ?
வீரா, முது சூர் பட வேல் எறியும்
சூரா, சுர லோக துரந்தரனே.

(17) யாம் ஓதிய கல்வியும், எம் அறிவும்
தாமே பெற, வேலவர் தந்ததனால்
பூ மேல் மயல் போய் அறம் மெய்ப் புணர்வீர்
நாமேல் நடவீர், நடவீர் இனியே.

(18) உதியா, மரியா, உணரா, மறவா,
விதி மால் அறியா விமலன் புதல்வா,
அதிகா, அநகா, அபயா, அமரா
பதி காவல, சூர பயங் கரனே.

(19) வடிவும் தனமும் மனமும் குணமும்
குடியும் குலமும் குடிபோ கியவா
அடி அந்தம் இலா அயில் வேல் அரசே
மிடி என்று ஒரு பாவி வெளிப்படினே.

(20) அரிதாகிய மெய்ப் பொருளுக்கு அடியேன்
உரிதா உபதேசம் உணர்த்தியவா
விரிதாரண, விக்ரம வேள், இமையோர்
புரிதாரக, நாக புரந்தரனே.

(21) கருதா மறவா நெறிகாண, எனக்கு
இருதாள் வனசம் தர என்று இசைவாய்
வரதா, முருகா, மயில் வாகனனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரதா, சுர சூர விபாடணனே.

(22) காளைக் குமரேசன் எனக் கருதித்
தாளைப் பணியத் தவம் எய்தியவா
பாளைக் குழல் வள்ளி பதம் பணியும்
வேளைச் சுர பூபதி, மேருவையே.

(23) அடியைக் குறியாது அறியா மையினால்
முடியக் கெடவோ? முறையோ? முறையோ?
வடி விக்ரம வேல் மகிபா, குறமின்
கொடியைப் புணரும் குண பூதரனே

(24) கூர்வேல் விழி மங்கையர் கொங்கையிலே
சேர்வேன், அருள் சேரவும் எண்ணுமதோ
சூர் வேரொடு குன்று தொளைத்த நெடும்
போர் வேல, புரந்தர பூபதியே.

(25) மெய்யே என வெவ்வினை வாழ்வை உகந்து
ஐயோ, அடியேன் அலையத் தகுமோ?
கையோ, அயிலோ, கழலோ முழுதும்
செய்யோய், மயில் ஏறிய சேவகனே.

(26) ஆதாரம் இலேன், அருளைப் பெறவே
நீதான் ஒரு சற்றும் நினைந்திலையே
வேதாகம ஞான விநோத, மன
அதீதா சுரலோக சிகாமணியே.

(27) மின்னே நிகர் வாழ்வை விரும்பிய யான்
என்னே விதியின் பயன் இங்கு இதுவோ?
பொன்னே, மணியே, பொருளே, அருளே,
மன்னே, மயில் ஏறிய வானவனே.

(28) ஆனா அமுதே, அயில் வேல் அரசே,
ஞானாகரனே, நவிலத் தகுமோ?
யான் ஆகிய என்னை விழுங்கி, வெறும்
தானாய் நிலை நின்றது தற்பரமே.

(29) இல்லே எனும் மாயையில் இட்டனை நீ
பொல்லேன் அறியாமை பொறுத்திலையே
மல்லேபுரி பன்னிரு வாகுவில் என்
சொல்லே புனையும் சுடர் வேலவனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(30) செவ்வான் உருவில் திகழ் வேலவன், அன்று
ஒவ்வாதது என உணர்வித் ததுதான்
அவ்வாறு அறிவார் அறிகின்றது அலால்
எவ்வாறு ஒருவர்க்கு இசைவிப்பதுவே.

(31) பாழ்வாழ்வு எனும் இப் படுமாயையிலே
வீழ்வாய் என என்னை விதித்தனையே
தாழ்வானவை செய்தன தாம் உளவோ?
வாழ்வாய் இனி நீ மயில் வாகனனே.

(32) கலையே பதறிக், கதறித் தலையூடு
அலையே படுமாறு, அதுவாய் விடவோ?
கொலையே புரி வேடர் குலப் பிடிதோய்
மலையே, மலை கூறிடு வாகையனே.

(33) சிந்தாகுல இல்லொடு செல்வம் எனும்
விந்தாடவி என்று விடப் பெறுவேன்
மந்தாகினி தந்த வரோதயனே
கந்தா, முருகா, கருணாகரனே.

(34) சிங்கார மடந்தையர் தீநெறி போய்
மங்காமல் எனக்கு வரம் தருவாய்
சங்க்ராம சிகாவல, சண்முகனே
கங்காநதி பால, க்ருபாகரனே.

(35) விதிகாணும் உடம்பை விடா வினையேன்
கதிகாண மலர்க் கழல் என்று அருள்வாய்?
மதி வாள்நுதல் வள்ளியை அல்லது பின்
துதியா விரதா, சுர பூபதியே.

(36) நாதா, குமரா நம என்று அரனார்
ஓதாய் என ஓதியது எப்பொருள் தான்?
வேதா முதல் விண்ணவர் சூடும் மலர்ப்
பாதா குறமின் பத சேகரனே.

(37) கிரிவாய் விடு விக்ரம வேல் இறையோன்
பரிவாரம் எனும் பதம் மேவலையே
புரிவாய் மனனே பொறையாம் அறிவால்
அரிவாய் அடியோடும் அகந்தையையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(38) ஆதாளியை, ஒன்று அறியேனை அறத்
தீது ஆளியை ஆண்டது செப்புமதோ
கூதாள கிராத குலிக்கு இறைவா
வேதாள கணம் புகழ் வேலவனே.

(39) மாஏழ் சனனம் கெட மாயைவிடா
மூஏடணை என்று முடிந்திடுமோ
கோவே, குறமின் கொடிதோள் புணரும்
தேவே சிவ சங்கர தேசிகனே.

(40) வினை ஓட விடும் கதிர் வேல் மறவேன்
மனையோடு தியங்கி மயங்கிடவோ?
சுனையோடு, அருவித் துறையோடு, பசுந்
தினையோடு, இதணோடு திரிந்தவனே.

(41) சாகாது, எனையே சரணங் களிலே
கா கா, நமனார் கலகம் செயும் நாள்
வாகா, முருகா, மயில் வாகனனே
யோகா, சிவ ஞான உபதேசிகனே.

(42) குறியைக் குறியாது குறித்து அறியும்
நெறியைத் தனிவேலை நிகழ்த்திடலும்
செறிவு அற்று, உலகோடு உரை சிந்தையும் அற்று
அறிவு அற்று, அறியாமையும் அற்றதுவே.

(43) தூசா மணியும் துகிலும் புனைவாள்
நேசா முருகா நினது அன்பு அருளால்
ஆசா நிகளம் துகளாயின பின்
பேசா அநுபூதி பிறந்ததுவே.

(44) சாடும் தனிவேல் முருகன் சரணம்
சூடும் படி தந்தது சொல்லு மதோ?
வீடும், சுரர் மாமுடி, வேதமும், வெம்
காடும், புனமும் கமழும் கழலே.

(45) கரவாகிய கல்வி உளார் கடை சென்று
இரவா வகை மெய்ப் பொருள் ஈகுவையோ?
குரவா, குமரா, குலிசாயுத, குஞ்
சரவா, சிவயோக தயாபரனே.

(46) எம் தாயும் எனக்கு அருள் தந்தையும் நீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தாகுலம் ஆனவை தீர்த்து எனையாள்
கந்தா, கதிர் வேலவனே, உமையாள்
மைந்தா, குமரா, மறை நாயகனே.

(47) ஆறு ஆறையும் நீத்து அதன் மேல் நிலையைப்
பேறா அடியேன், பெறுமாறு உளதோ?
சீறாவரு சூர் சிதைவித்து, இமையோர்
கூறா உலகம் குளிர்வித்தவனே.

(48) அறிவு ஒன்று அற நின்று, அறிவார் அறிவில்
பிறிவு ஒன்று அற நின்ற, பிரான் அலையோ?
செறிவு ஒன்று அற வந்து, இருளே சிதைய
வெறி வென்றவரோடு உறும் வேலவனே.

(49) தன்னந் தனி நின்றது, தான் அறிய
இன்னம் ஒருவர்க்கு இசைவிப் பதுவோ?
மின்னும் கதிர் வேல் விகிர்தா, நினைவார்
கின்னம் களையும் க்ருபை சூழ் சுடரே.

(50) மதிகெட்டு அறவாடி, மயங்கி, அறக்
கதிகெட்டு, அவமே கெடவோ கடவேன்?
நதி புத்திர, ஞான சுகாதிப, அத்
திதி புத்திரர் வீறு அடு சேவகனே.

(51) உருவாய் அருவாய், உளதாய் இலதாய்
மருவாய் மலராய், மணியாய் ஒளியாய்க்
கருவாய் உயிராய்க், கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



## அமரர் செல்லத்துரை நடேசபிள்ளை

(அல்லைப்பிட்டி இனிச்சபுளியடி முருகன் ஆலய தர்மகர்த்தாவும்
மட்டக்களப்பு ஈஸ்வரி சினிமாதியட்டர், செங்கலடி
ஸ்ரீமுருகன் தங்க நகை, யாழ்ப்பாணம்
தங்கமுருகன் நகை முன்னாள் உரிமையாளர்)

**பிறப்பு** 21.03.1936 **இறப்பு** 26.09.2019

கண்முன்னே வாழ்ந்த காலம்
எங்கள் முன்னே உங்கள் வதனம்
எந்நாளும் உயிர்வாழும்
மண்விட்டு மறைந்து நீங்கள்
விண் நோக்கிச் சென்றாலும்
எங்களுடன் என்றும் இருப்பீர்கள்

பிரிவுத்துயரில்
குடும்பத்தினர்

# இதய அஞ்சலி



எம் நெஞ்சமதை கனக்க வைத்து கண்களில் கண்ணீர்
கண்ணிமைப் பொழுதினில் காலனவன் கவர்ந்து கொண்டான்
இது கனவாக இருக்காதா என ஏங்கியது எங்கள் மனம்
களங்கமில்லாது கவலையில்லாது
காத்திருப்புக்களோடும் ஏக்கங்களோடும்
கணநேரத்தில் வாழ்க்கைப் பயணத்தை
கடந்த செய்தி எம் நெஞ்சமதை பிளந்ததே.....

*அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டிக் கொள்கின்றோம்.*

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அமரர் **செல்லத்துரை நடேசபிள்ளை**
(2ம் வட்டாரம் அல்லைப்பிட்டி)

மண்ணில் 21.03.1936
விண்ணில் 26.09.2019

பிரிவால் துயருறும்
**நிர்வாகசபை உறுப்பினர்கள்,**
**அங்கத்தவர்கள்.**
**கமக்காரர் அமைப்பு - அல்லைப்பிட்டி.**

வடிவமைப்பு: அகெழும்பு பிரிண்டேர்ஸ் - 0771974875



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தைமிகு நெஞ்சமே !
சிறகொடிந்து சென்றதெங்கே?



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 23 . 03 . 1936 | 26 . 09 . 2019 |

அமரர்

## செல்லத்துரை நடேசபிள்ளை

( தர்மகர்த்தா, இனிச்ச புளியடி முருகன் ஆலயம் – அல்லைப்பிட்டி )
( ஈஸ்வரி சினிமா தியேட்டர் – மட்டக்களப்பு, ஶ்ரீமுருகன் தங்க நகை – செங்கலடி, தங்கமுருகன் நகை மாடம் – யாழ்ப்பாணம் முன்னாள் உரிமையாளர்)

[illegible]

சிறகொடிந்து சென்றதெங்கே...?

[illegible]

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

"திருவெண்காடு"
மண்டைதீவு 6

பொ.வி.திருநாவுக்கரசு
( குடும்பத்தினர் )

# கண்ணீர் அஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 23 | 26 |
| 03 | 09 |
| 1936 | 2019 |

அமரர்

## செல்லத்துரை நடேசபிள்ளை

(அல்லைப்பிட்டி இனிச்சபுளியடி முருகன் ஆலய தர்மகர்த்தா)

நெஞ்சமதில் நிலைத்து நின்று
எண்ணமதில் என்றும் நிலைத்து
வண்ணமலர் வாசமென
மனங்களிலே வீசி நின்றீர்
கண்ணிமைக்கும் காலத்துள்
காலனுமைக் கவர்ந்து சென்ற
கொடுமையெண்ணிக் கலங்குகின்றோம்
மனம் வெதும்பி வாடுகின்றோம்.
ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !

29.09.2019

பிரிவால் துயருறும்
அல்லைப்பிட்டி மூன்று முடி கருமாரி அம்மன்
ஆலய பரிபாலன சபையினர்

# கண்ணீர்ப் பூக்கள்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 21 | | 26 |
| 03 | | 09 |
| 1936 | | 2019 |



**அமரர் செல்லத்துரை [உடையார்] நடேசபிள்ளை**

(அல்லைப்பிட்டி, இனிச்சபுளியடி முருகன் ஆலய அறங்காவலர், சமாதான நீதவான்)

தூக்கி வளர்த்தாய்! தோளோடு சேர்த்தாய்!
ஆக்கிய எதையும் அன்போடு தந்தாய்!
தேக்கிய பாச மழையினைப் பொழிந்தாய்!
உனை இழந்து விட்டோமே எங்கள் அன்பு மாமா!

பழமரத்துப் பறவைகளாய்ப் பறந்தோடி வந்துன்
பாதங்களில் கிடந்துநாம் பூரித்து மகிழ்ந்திடுவோம்!
அழகான சிரிப்பும், அறிவுரையும், அரவணைப்பும்
விழலாகச் விண்ணகமேன் விரைந்தாயோ சின்ன மாமா!

அல்லைப் பிட்டியூர் உடையாரின் ஆறு முகம்
கல்லைக் கனியாக்கும் கடைசிமுகம் நீ மாமா!
வெல்லப் பேச்சும் வென்றெடுக்கும் நற்செயலும்
சொல்லச் சுவையாமோ, சொல்லாமல் ஏன் பிரிந்தீர்? தங்க மாமா!

நெஞ்சம் வேகுதே! நினைவுதடு மாறுதே!
அஞ்சேல் எனை உதவும் அருமைமாமா இன்றில்லை!
வஞ்சக் காலனவன் வலைவீசிப் பிடித்தானோ?
இறைவனடி சேர்வாயே எமதருமை மாமாவே!

அல்லைப்பிட்டி - 02
29.09.2019

உங்கள் பிரிவுத்துயரினால் வாடும்,
மருமக்கள்
(அமரர்கள் நா. ஞானசம்பந்தன் தையல்நாயகி,
அமரர்கள் நா. சச்சிதானந்தன் கடேஸ்வரி தம்பதியினரின் பிள்ளைகள்)
பவானி, சிவானந்தன், [illegible]

# கண்ணீர் அஞ்சலி



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 21 | 26 |
| 03 | 09 |
| 1926 | 2019 |

அமரர்

**செல்லத்துரை (உடையார்) நடேசபிள்ளை அவர்கள்**

(அல்லைப்பிட்டி இனிச்சபுளியடி ஸ்ரீ முருகன் ஆலய
தர்மகர்த்தாவும், சமாதானநீதவானும்)

காலத்தின் கணங்கள் பதில் சொல்லும் நேரம்
கனவில் உங்கள் கற்பனைகள் கரைந்தது ஏனோ
கவலைகள் இன்றி தூங்குகின்றீர்கள் நீங்கள்
கண்ணீரில் நாம் கரைகின்றோம் ஏனோ
காற்றில் கரைந்த உங்கள் ஜீவன்
எம் மூச்சாகி உடலில் தரிக்காதோ
சிரித்த உங்கள் முகத்தின்
சிரிப்பில்லாக் காட்சி காணாமல்
எம் கண்கள் வலுவிழந்து போகாதோ
நீங்களில்லா இவ்வுலகில் நமக்கேது தேவை
இடி விழுந்த இதயத்தால்
இறைவனை நாம் வேண்டுகின்றோம்
உங்கள் ஆத்மா சாந்தி பெற......

அல்லைப்பிட்டி

உங்கள் பிரிவால் வாடும்
பரிபாலன சபை
அல்லைப்பிட்டி சிந்தாமணிப்பிள்ளையார் கோவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்ப் பூக்கள்

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 21 | | 26 |
| 03 | | 09 |
| 1936 | | 2019 |



## அமரர் செல்லத்துரை [உடையார்] நடேசபிள்ளை

(அல்லைப்பிட்டி, இனிச்சபுளியடி முருகன் ஆலய அறங்காவலர், சமாதான நீதவான்)

குஞ்சையா ;
எங்கள் தந்தையின் பிரிவின் வெற்றிடத்தை நிறைவுபடுத்தி இருந்தீர்கள். இதுவரையில்.

அன்பும், பரிவும், அறிவுரையும், கண்டிப்பும், கலந்து கண்டோம் உங்களிடம் குஞ்சையா.
தலைமகன் எப்படி வாழவேண்டும் என்று சந்ததியினருக்கு வாழ்ந்து காட்டி சென்றீர்கள் குஞ்சையா.
அறம், தர்மம், ஒழுக்கம், பக்தி அத்தனைக்கும் உதாரணமாய் விளங்கினீர்கள் குஞ்சையா.

குஞ்சையா ;
இக்காலத்தில் வாழ்ந்த அக்கால மாமனிதராக காண்கின்றோம். உங்களை.

ஊரில் தனக்கொரு கோவில் வேண்டியன்றோ உங்களை படைத்தான் இறைவன்.
**"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்"** என்ற ஔவைத்தாயின் வாக்கை
தலைமேற்கொண்டு உடையார் தாத்தா, ஐயம்மா அவர்களின் தவத்தை நல் மகனாய் பூரணப்படுத்தினீர்கள் குஞ்சையா.
உங்கள் பெரியண்ணனின் குழந்தைகளாகிய நாங்கள் உங்களால் பெருமிதம் கொள்கின்றோம் குஞ்சையா.
இன்று உங்கள் பிரிவால் வாடினும் இது இயற்கை அன்றோ எனும் திடம் கொண்டு
உங்கள் ஆத்மா இறைவனடி சேரும் என்று உறுதிகொண்டோம் அன்புக் குஞ்சையா....

அல்லைப்பிட்டி – 02
29.09.2019

உங்கள் பிரிவால் துயருறும்
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

# கண்ணீர் அஞ்சலி



| அன்னை மடியில் | இறைவன் அடியில் |
|---|---|
| 21.03.1936 | 26.09.2019 |

## அமரர் திரு. செல்லத்துரை நடேசபிள்ளை

[அல்லைப்பிட்டி இனிச்ச புளியடி ஸ்ரீமுருகப் பெருமான் ஆதினகர்த்தா]



உடையான் வம்சாவழியில் உதித்து
அல்லையூர் முருகனை தினமும் தரிசித்து
மங்கையற்கரசி அம்மாவை மணந்து
தனது மழலைச் செல்வங்கள்
பேரப்பிள்ளைகள் கொஞ்சிக் குலாவி
முருகப்பெருமானின் திருக்கோவிலை
வர்ணக்கலைக் கோவிலாக்கி
அனைவரையும் இன்முகத்துடன் வரவேற்று
புன்சிரிப்பால் அனைத்தையும் சாதித்து
பன்னிருகரத்தான் திருவடியடைந்தார்



அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கு
ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும்
எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்..

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

உங்கள் பிரிவால் துயருறும்,
**சிவஸ்ரீ இ. பாலகிருஷ்ணக் குருக்கள் குடும்பத்தினர்**

# விழிநீர் அஞ்சலி



பிறப்பு
21.03.1936

இறப்பு
26.09.2019

## அமரர்.
## செல்லத்துரை நடேசபிள்ளை

(அல்லைப்பிட்டி இனிச்சபுளியடி முருகன் கோவில் தர்மகர்த்தாவும்
சமூகசேவையாளரும்)

அல்லைப்பிட்டியில் பிறந்து வளர்ந்து வாழ்ந்து
மறைந்த எங்கள் அன்புக்குரிய நடேசண்ணாவின்
பழைய நினைவுகள் என்றும் மனதிலிருந்து
அழிக்க முடியாதவைகளாகும்.சிறு வயது முதல்
மறையும் சில நாட்கள் வரை ஓயாது
ஓடிக்கொண்டிருந்த அவரை காலன் திடிரென
கவர்ந்து சென்றுவிட்டான்
என்ற செய்தி அறிந்து பெரும் கவலை கொண்டுள்ளோம்.
ஊரில் முன்னெடுக்கப்படும் ஆலய பணியாக இருந்தாலும்
அல்லது பொதுப்பணியாக இருந்தாலும் நடேசண்ணா முன்நின்று
செய்வதனை வெளிநாடுகளிலிருந்து பார்க்க முடியும்
இனி அவரைப்ஆபால் யாருளர். நடேசண்ணாவின் இழப்பு
எமது கிராமத்துக்க பேரிழப்பாகும்.

அன்னாரின் மறைவால் துயர்ற்றிருக்கும்குடும்பத்தினருக்கு எங்கள் அனுதாபங்களை தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய அல்லைப்பிட்டி கருமாரியம்மனை வேண்டிநிற்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவால் வருந்தும்
திரு.எஸ்.எஸ் குடும்பத்தினர் அல்லைப்பிட்டி
திரு.எஸ்.ஆர் குடும்பத்தினர் (பிரான்ஸ்)

www.allaiyoor.co.m

# இதய அஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 21 | 26 |
| 03 | 09 |
| 1936 | 2019 |



**அமரர் செல்லத்துரை [உடையார்] நடேசபிள்ளை**
(அல்லைப்பிட்டி, இனிச்சபுளியடி முருகன் ஆலய அறங்காவலர், சமாதான நீதவான்)

வாழ்வெனும் தேன் கூட்டில் வசந்தமுடன் வாழ்ந்து
பாசமுடன் நீ தெளிந்த பண்புடன் பழகி
நேசத்துடன் பழகி பாசமாய் இணைந்து
இடையிலே எம்மை விட்டுச் சென்றதேனோ?
நீ எங்களை விட்டுப் பிரிந்ததை
நினைக்க முடியவில்லை நீ பிரிந்த சேதி கேட்டு நாம்
பகிர்கின்றோம் கண்ணீரை

28.09.2019

உங்கள் பிரிவுத்துயரினால் வாடும்,
வேலாயுதபிள்ளை குடும்பத்தினர்
(பிரான்ஸ்)

# விழிநீர் சொரிகின்றோம்!



அன்னை மடியில் 1936.03.21

ஆண்டவன் அடியில் 2019.09.26

அமரர்

**செல்லத்துரை (உடையார்) நடேசபிள்ளை அவர்கள்**

(அல்லைப்பிட்டி இனிச்சபுளியடி ஸ்ரீ முருகன் ஆலய தர்மகர்த்தாவும், சமாதானநீதவானும்)

தாத்தா வென்று அழைக்கத் தந்த இன்பம் இன்றில்லையே?
தழுவி முதுகில், மடியில், தோளில் அமர நீங்களில்லையே!
பார்த்தாலும் பழகினாலும் பக்கத்தில் இருந்தாலும்
பாசமோ டரவணைக்க எம் தாத்தா இல்லையே!
தூர இருந்தாலும் தொலைபேசியில் பேசுவாய்!
நேற்றைக்குக் கண்ட முகம் இன்றைக்கு இல்லையெனில்
நெஞ்சம் தாங்கிடுமோ? நீ ஏன் பிரிந்தாய்? தாத்தாவே!

26.09.2019
அல்லைப்பிட்டி

துயருடன்
பேரப்பிள்ளைகள்

# கண்ணீர் அஞ்சலி!

மலர்வு 21 ◈ 03 ◈ 1936



உதிர்வு 26 ◈ 09 ◈ 2019

அமரர்

**செல்லத்துரை (உடையார்) நடேசபிள்ளை அவர்கள்**

(அல்லைப்பிட்டி இனிச்சபுளியடி ஸ்ரீ முருகன் ஆலய தர்மகர்த்தாவும், சமாதானநீதவானும்)

அல்லைப்பிட்டி உடையாரின் இளையமகன், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் மைந்தன், ஊரவர் மனமறிந்து உதவும் கரங்களுடையோன், எவரையும் இன்முகத்துடன் அரவணைக்கும் இதயமுடையோன். எமது கண்களில் நீர்வாரத் திடீரெனப் பிரிந்ததும் ஏனோ? இனிச்ச புளியடியான் ஏன் அழைத்தானோ? எத்தனை துயர் வந்தபோதும் நடேசர் எமக்கு இருக்கிறார் என்ற மனத்தைரியம் ஊர் மக்களுக்கு எப்போதும் இருந்ததே! உன் வள்ளன்மை, இறைத் தொண்டு, எளிமை, அன்பு காட்டும் வலிமை, அறிவுரை கூறி ஆற்றுப் படுத்தும் பண்பு இவற்றை அல்லைப்பிட்டியில் இனி யாரிடம் காண்போம் ஐயா? ஆலமரமாய் நீயிருந்து அனைவர்க்கும் நிழலானாய். சிறியவர், பெரியவர் பேதமின்றி எல்லோருடனும் கதைகலப்பாய் உரையாடும் மனம் உம்போல் வேறு யாருக்கு வரும் ஐயா? பொல்லாத காலன் இன்னும் சில காலம் உம்மைவிட்டு வைத்திருக்கக் கூடாதா? எம் நெஞ்சங்கள் விம்முகின்றன. நினைவெல்லாம் தடுமாறுகின்றது. ஐயா! உன்பிரிவினால் ஏங்கி அழுகின்றோம். உன் ஆத்ம சாந்திக்கு இறைவனை வேண்டுகின்றோம்.

26.09.2019
அல்லைப்பிட்டி

உங்கள் பிரிவால் வாடும்,
அல்லைப்பிட்டி வாழ் மக்கள்

# கண்ணீர் அஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 21 | 26 |
| 03 | 09 |
| 1936 | 2019 |

## அமரர் செல்லத்துரை (உடையார்) நடேசபிள்ளை

(அல்லைப்பிட்டி, இனிச்சபுளியடி முருகன் ஆலய தர்மகர்த்தா, சமாதான நீதவான்)

அன்பொழுக மாமா என்றழைக்க
இனி யார் உளரோ?
வெளிநாட்டில் வாழ்ந்தாலும் எம்
தாய்மாமன் இருக்கின்றார் என நம்பித்தான்
அல்லைப்பிட்டிக்கு அடிக்கடி ஓடொடி வருவோமே!
ஐம்பத்து நாலு ஆண்டுகளாய் அருகிருந்து பார்த்து வளர்த்த
அருமைத் தம்பியைப் பிரியவும், பிரான்ஸ் செல்லவும் எனக்குக்
காலம் வந்ததே என்று கவலைப்பட்டவர் எங்கள் தாயார்
உடையார் வம்சத்தின் ஒளிவிளக்கே!
ஊரவர்களின் நம்பிக்கைச் சொத்தே!
ஒற்றுமையாய் எங்களை ஒரு குடைக்கீழ்
அரவணைத்துப் பாதுகாத்த திருவிளக்கே!
கருணையில்லாத காலன் உங்கள் உயிர் கவர்ந்தானே!
உங்கள் நினைவில் கலங்குகிறோம்; பிரிவால் துடிக்கின்றோம்
அன்பு மாமாவே! அடுத்த பிறவியிலும்
எமைக்காக்க வந்திடுங்கள்!

உங்கள் பிரிவுத்துயரினால் வாடும்,
மருமக்கள்
(அமரர்கள் சி. இரத்தினசபாபதி (புபாலதிபர்)
சிவயோகலட்சுமி தம்பதியரின் பிள்ளைகள்)

அல்லைப்பிட்டி
28.09.2019

# கண்ணீர் அஞ்சலி



மண்ணில்
21 MAR 1936

விண்ணில்
26 SEP 2019

திரு செல்லத்துரை நடேசபிள்ளை

ஆலமரம் சரிந்ததே எங்கள் ஆலமரம் சரிந்ததே
அல்லபிட்டி பெற்றெடுத்த அருமை மகனே
ராசாவின் தோட்டத்தின் ராஜ மகனே
இனிச்சபுளியடி முருகனின் இறைபக்தனே
ஈசனின் அருள் இணையாக இருந்த போதும்
எமை விட்டு இத்தனை தூரம் பிரிந்ததென்ன
அருமை பிள்ளைகள் ஆறையும் அந்தரத்தில் விட்டுவிட்டு
ஐயா நீங்கள் அத்தனை தூரம் சென்றதென்ன
உற்றார் உறவினர் நண்பர்கள்
வடக்கிலும் கிழக்கிலும் வகை தொகையாய் இருந்தபோதும்
எம்மை வார்த்தை இன்றி விட்டுச்செல்ல ஐயா எப்படி ஆனது
எண்பத்திமூன்று வயதை இளமையாய் கடந்த நீங்கள்
என்றும் எம்மோடு இருந்து எமக்கான வழியாய்
உறவுகளின் விழியாய் நண்பர்களின் மொழியாய்
என்றென்றும் எம்மோடு வாழ்வீர்கள் என்று நம்பிக்கையோடு
கண்ணீர் மலர்களை காணிக்கையாக்குகிறோம்

சதானந்தன் - கிருபாகரன்
(சிவா)குமார் நண்பர்கள்
பிரான்ஸ் (PARIS)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

கடந்த 26.09.2019 வியாழக்கிழமை திடீரென்று
எம்மையெல்லாம் மீளாயத்துயரில் மிதக்க விட்டு
இறையடி சேர்ந்த எமது அன்புத் தெய்வம்

அமரர்

## செல்லத்துரை - நடேசபிள்ளை

அவர்களின் மரணச் செய்தியறிந்து உடன்வந்து வேண்டிய உதவிகள் புரிந்தவர்களிற்கும், நேரடியாக வந்து எமது குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறியவர்களிற்கும் தந்தி, தொலைபேசி, தொலைநகல் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களிற்கும், கண்ணீர் அஞ்சலி, மலர்மாலை, மலர்வளையம் சாத்தி தமது அஞ்சலியைத் செலுத்தியவர்களிற்கும், இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களிற்கும், கிரியைகளைச் சிறப்புற நடாத்திய பெரியோர்களிற்கும், அமரரின் அந்தியேட்டி, வீட்டுக்கிருத்திய கிரியைகளை ஆற்றிய அந்தணப் பெரியோருக்கும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொண்ட அத்தனை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவருக்கும், இம்மலரினை சிறப்புற அச்சிட்டு நல்கிய அச்சகத்தாருக்கும் எம் நெஞ்சம் நிறைந்த நன்றி களையும் வணக்கங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.



நன்றி

இங்ஙனம்
குடும்பத்தினர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



யாழ்ப்பாணம்

அல்லைப்பிட்டி அம்பதிவாசரும்

உயர்தவச் சைவவேளாண்குல திலகரும்

இலங்கை நாயகமா முதலியார் வழிவழி வந்தருமாகிய

அவர்களது அருந்தவப் புதல்வன்

அமரர்

# திருவாளர் செல்லத்துரை

(அல்லைப்பிட்டி மண்கும்பான் மண்டைதீவு முன்னாள் உடையார்)

அவர்களது யாக்கை மறைவு குறித்த

# நினைவு மலர்

1977

(மறுபதிப்பு - 2019)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வைத்திலிங்கம் செல்லத்துரை

தோற்றம் : 02.09.1887 மறைவு : 03.10.1977

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வைத்திலிங்கம் செல்லத்துரை

தோற்றம் : 02.09.1887 மறைவு : 03.10.1977

# செல்லத்துரை சொர்ணம்மா

தோற்றம் : 20.10.1898 மறைவு : 18.05.1957

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரியோரிற் பேரருளாளன்

**"தோன்றிற் புகழுடன் தோன்றுக - அஃதிலார்**

**தோன்றலிற் தோன்றாமை நன்று"**

இதன் எடுத்துக்காட்டாகத் தோன்றிய அமரர் வை. செல்லத்துரை உடையார் ஐயா அவர்கள் ஈழவள நாட்டின் தமிழ் மணம் கமழும் யாழ்ப்பாணத்தின் திலகமெனத் திகழும் மண்டைதீவின் கண்ணே சைவவேளாள் பெருங்குடியில் இலங்கை நாத முதலியின் பேரனாகிய வினாசித்தம்பி மணியகாரரின் வழித்தோன்றலாய் அவதரித்தார். பரம்பரையாய் இவரின் முன்னோர்கள் அரச பணியில் உயர்ந்த ஸ்தானம் வகித்தது போல் இவரும் உரிய பருவத்தில் கல்வி பெற்றதும் 21 வது வயதிலே உடையாராகத் தெரிவு செய்யப் பெற்று அல்லைப்பிட்டிக் கோவில் பற்று எனப்படும் மண்கும்பான், அல்லைப்பிட்டி, மண்டைதீவு ஆகிய முக்கிராமங்களிலும் இன, மத பாகுபாடின்றி நற்பணியாற்றி வந்தார். 1940 ஆம் ஆண்டில் ஓய்வு பெற்ற பின்பும் வெலியாத்து உத்தியோகத்தராகவும், சடுதி மரண விசாரணை உத்தியோகத்தராகவும், சேவையாற்றினார். தமது சேவைக்காலம் முழுவதும் சமூகத்தவரின் இடர்களைத் தீர்ப்பதிலேயே செலவழித்தார். சமூகத்தில் ஏற்படும் பிணக்குகள் தகராறுகள் எல்லாவற்றையும் நீதித் தேவையாக நின்று தீர்த்து வைப்பார். மக்களின் பெருமதிப்பைப் பெற்ற உடையார் ஐயா தெருவில் வருகிறார் என்றால் எல்லோரினதும் தோலில் கிடக்கும் சால்வை கைக்கோ அரைக்கோ போய்விடும். அவ்வளவிற்குப் பெருமதிப்புப் பெற்ற கனவானாகத் திகழ்ந்தார். எந்நேரமும் வெண்ணிற உடையுடன் விபூதிப் பூச்சும் சந்தனப் பொட்டும் காலில் செருப்பும் கையிற் குடையுமாகத் தோன்றும் கம்பீரத் தோற்றம் யார் மனதையும் விட்டகலா. எல்லோரிடமும் அன்பாகப் பேசி அறிவுரை வழங்கும் திறமையுடைய பண்பாளர். அவரின் உதவி நாடி அவரது இல்லத்திற்குப் போகாதவரே இல்லையெனலாம். உடையார் வீடு என்றால் ஒரு தர்மசத்திரம் தான். வருவோர்க்கும் போவோர்க்கும் ஏழைகட்கும் இவரும் இவரது தர்மபத்தினியாரும் விருந்தோம்பும் பண்பே தனிச் சிறப்புடையதாகும். ஆன்மீகத் துறையில் மிக்க ஈடுபாடுள்ள உடையார் ஐயா மண்டைதீவு சிறப்புலம் கந்தசுவாமி கோவில் பரிபாலகராகவும், அல்லைப்பிட்டி இனிச்ச புளியடி முருகன் ஆலய பரிபாலகராகவும் சிவத்தொண்டு புரிந்த பேரருளாளராவார்.

*"செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருந்த உடையார்*

*ஐயா வானதத்தவர்க்கு நல்விருந்தானார்"*

**"உன்னுமுள தையமிலதுணர்வா யோவாது**

**மன்னு பவந்தீர்க்கு மருந்து"**

க. மாணிக்கலிங்கம்

***ஆசிரியர், மண்டைதீவு***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஞ்சலி

## யோகேந்திரா துரைசுவாமி

சொல்லிலும், செயலிலும் தீவுப் பகுதிகளின் ஒரு தந்தையாக விளங்கிய பெரியார் வைத்திலிங்கம் செல்லத்துரை அவர்களின் மறைவு, சுலபமாக ஈடுசெய்ய முடியாதது. அன்னார் தமது வாழ்க்கை முழுவதும், மக்களுடனேயே வாழ்ந்தவர். அவர் வகித்த பல பதவிகளில், எல்லா மக்களுடனும் அதிகாரபூர்வமாகவும், அதிகாரபூர்வமில்லாமலும் பழகி, மக்கள் மத்தியில் சிறப்பாக வாழ்ந்தவர். விதானையாராகவும், உடையாராகவும், பிறப்பு இறப்பு பதிவாளராகவும், திடீர் மரண விசாரணை அதிகாரியாகவும் அவர் பல பதவிகளை வகித்த போதிலும் இச்சேவைக் காலத்தில் அவர் இருந்த போது, தமது கடமைகளை நேர்மையாகவும் பயமின்றியும் நிறைவேற்றி, மக்களின் நன்றியையும், மதிப்பையும் பெற்றுக் கொண்டார்.

தனது மக்களுக்குப் பல வழிகளிலும் அவர் சேவையாற்றியுள்ளார். ஒரு மதிப்புள்ள, தன்னிகரற்ற மனிதராக அவர் விளங்கியதால், மக்கள் தங்களின் தகராறுகளை நீதியாகவும், இருசாராருக்கு உடன்பாடாகவும் தீர்த்து வைக்க அவரை நாடினார்கள். சமய பக்தியுள்ள இவர் தமது கிராமத்துக்கெனச் சொந்தமாக இனிச்ச புளியடி முருகன் ஆலயத்தை நிறுவி, இறக்கும் வரை நித்திய பூசை செய்வித்து வந்தார். இவர் மண்டைதீவு சிறப்புலம் முத்துக்குமாரசுவாமி ஆலயத்தில் தர்மகர்த்தாவும் ஆவர்.

இப்பெரியாரை எனக்கு, சொந்தக்காரராக மட்டுமன்றி, எமது குடும்ப நண்பராக எனது பாடசாலைக் காலத்திலிருந்தே தெரியும். இதனை ஒரு பெருமையாக நான் கொள்கிறேன். இப்பெரியாரை நினைக்கும் தோறும், அவர் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கக் கையாளும் சுலபமான - நேர்மையான வழிமுறைகள் அவரது நிமிர்ந்த நடை, அவரது சிறப்பியல்புகள்தான் உடன் என் மனக் கண்முன் தோன்றும். தனது கொள்கைகளிலிருந்து வழுவாமல், உயர்ந்த எண்ணங்களுடன் வாழ்ந்த இப்பெரியார் விருந்தோம்பும் பண்புடையவர். கும்பலோடு சேர்ந்து 'கோவிந்தா' போடாமல் சுயநலம் பாராமல், நேர்மையான - நீதியான அடிப்படையில் ஆலோசித்துச் சொந்தமாக முடிவெடித்து அதில் உறுதியாகப் பற்றி நிற்பவர். அவர் ஒரு வழியைத் தேரந்தெடுத்தார் என்றால், அதனை மாற்ற முடியாது!

மரபுவழியாக வந்த நேர்மை, ஒருமைப்பாடு, சேவை மனப்பான்மை எம்மத்தியிலிருந்து குறைந்துவரும் இக்காலகட்டத்தில், பெரியார் வைத்திலிங்கம் செல்லத்துரை அவர்கள் பின்பற்றிய உன்னத வழி முறைகள், எமக்குப் பெரும் நம்பிக்கையையும் தைரியத்தையும் கொடுக்கும்.

"மகேந்திரா"

*1, சேர் துரைசுவாமி வீதி,*

*யாழ்ப்பாணம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவத்திரு. வைத்திலிங்கம் செல்லத்துரை உடையார்

சிவத்திரு. வைத்திலிங்கம் செல்லத்துரை உடையார் வேலணைத் தீவு, சிறப்பாக அல்லைப்பிட்டி செய்த தவப் பயனாக வந்துதித்தார். வேலணைத் தீவில் சேர். வைத்திலிங்கம் துரைச்சாமி, அமரர் வி. எ. கந்தையா, புங்குடுதீவு பசுபதிப்பிள்ளை விதானையார், நெடுந்தீவு கொடிவேலி விதானையார், சரவணையூர் சரவண முத்து உடையார், வேலணை மேற்கு கந்தப்ப உடையார் ஆகிய பலரும் ஒருவராய் திரண்ட பேருருவே அல்லைப்பிட்டி செல்லத்துரை உடையார். இப்பெரியார் தமது உத்தியோக காலத்தில் தீவகம் முழுமையும் திருவுலா எழுந்தருளிப் பொதுநல சேவைகளில் ஈடுபட்டு வந்தார். தமது தொண்ணூறாவது வயது வரை பேரழகு முப்பெனும் பெருவேடப் பொலிவு கொண்டார்.

தமது இருபத்தோராவது வயதிலே அல்லைப்பிட்டி, மண்கும்பான் கிராமங்களுக்குப் பொலிஸ் விதானையாராகவும், பின்னர் தமது இருபத்தாறாவது வயதில் மண்டைதீவு, அல்லைப்பிட்டி, மண்கும்பான் ஆகிய கிராமங்களுக்கு உடையாராகவும், அதன் பின்னர் ஓய்வு பெற்று தமது எண்பதாவது வயது வரை அல்லைப்பிட்டி, மண்டைதீவு, மண்கும்பான் கிராமங்களுக்கு வெலியாத்து உத்தியோகத்தராகவும், சடுதி மரண விசாரணை அதிகாரியாகவும், ஓர்சில காலம் மேற்படி பிரதேசத்தில் விவாகம், பிறப்பு, இறப்பு பதிவாளராகவும் கடமை புரிந்தார்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து தமது தொண்ணூறாவது வயதுவரை பொதுநலப் பணிகளுள் ஈடுபட்டு சாதனையைப் புரிந்த பெரியார். இப்பேர்ப்பட்ட விசித்திரப் பிறவி இவர். நடமாடும் தெய்வமாக இருக்கும் மக்களுக்கே தமது சேவைகளை அர்ப்பணித்தார். மனித சமுதாயமே நாம் வணங்கும் ஈஸ்வர சந்நிதானம் எனக் கொண்டவர்.

இப்பெரியார் தமது தொண்ணூறு ஆண்டுகள் சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டார். அவர் விட்ட இடத்திலிருந்து அவர் மக்கள் அவர் பணியைத் தொடர்வார்களாக.

**வாழ்க உடையார் புகழ்**

**சாந்தி! சாந்தி! சாந்தி!**

வே. பேரம்பலம் (அப்பாத்துரை)

***ஆசிரியர்***

***முதுபெரும் சைவப் பெரியார்***

***வேலணை மேற்கு***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலஞ்சென்ற
## வைத்திலிங்கம் செல்லத்துரை உடையாரின்
## நீங்காத நினைவுகள்

பல தொல்லைகள் அலைமோதும் நேரத்தில் அல்லல் அறுக்கும் வல்லமை படைத்தோர் சிலரின் பட்டியல் சிந்தனைத் திரையில் வந்து கொண்டிருக்கும். அத்தகையோர் வரிசையில் முதலிடம் பெறுபவர் வைத்திலிங்கம் செல்லத்துரை உடையாரே.

அவரிடம் அன்புண்டு அறிவுண்டு, பண்புண்டு சாதுரியம் உண்டு, நம்பிக்கை உண்டு, ஆராயும் கண்கள் உண்டு, அளந்து பேசும் ஆற்றல் உண்டு, எல்லாவற்றிலும் மேலாக மனிதரைக் கையாளும் திறமையுண்டு.

அவருடன் உறவு கொண்டால் அவ்வுறவு நீடிக்கும். அன்பும் பண்பும் வளர்ந்துகொண்டேயிருக்கும். அவருடைய வெள்ளைத் துயில் ஆடையும் சந்தனப் பொட்டும் பிறரை வசிகரிக்கும் ஆற்றலைக் கூட்டின.

தலைமைக்காரன் மத்தியிலும் அவர் முதலிடம் பெற்றார். 21 வயதிலேயே அல்லைப்பிட்டிக் கிராமத் தலைமைக்காரனாக நியமிக்கப்பட்டார். சில வருடங்களில் அல்லைப்பிட்டிக் கோவிற் பற்று உடையார் பதவியை ஏற்றார். வயதுக் கட்டுப்பாடு குறுக்கிடும் வரை அப்பதவியைத் திறம்பட நடாத்தினார்.

அவரது சேவையில் மேலதிகாரிகள் குறை காணவில்லை. வாதி, பிரதிவாதிகள் துன்புறாவகையில் சட்டத்தை மனிதாபிமானத்தோடு தளர்த்திக் கடமையாற்றினார். இவருடைய சேவை பாராட்டத்தக்கது.

அவர் ஒரு காணியாளர் (Land Lord). அவருடைய சொத்துக்கள் அவருடைய மூதாதையரால் தீவினைவிட்டு ஈட்டப்பட்டு அவரை அடைந்தன.

அவர் காசைக் கடவுள் என்று கும்பிடவில்லை. தனது சொத்துக்களின் வருவாயைக் கொண்டு வருவிருந்து காத்திருக்கும் பெருந் தொண்டு புரிந்தவர். வரண்ட பிரதேசத்தில் சிறந்த கமக்காரனாயிருந்தார்.

அவர் முருகனை வழிபட்டார். ஆயுட்காலம் முழுவதும் இரு திருமுருகன் ஆலயங்களைப் பராமரித்தார். திருப்பணி வேலைகள் செய்தார். இவ் ஆலயங்களும் அவருடைய மூதாதையர் வழிவந்தன.

சாந்தமான குணமுடையவர். எச்சந்தர்ப்பத்திலும் சீற்றம் கொண்டதில்லை. தனது திறமையை அறிந்திருந்தார். எவரிடமும் உதவியை எதிர்பார்த்ததில்லை.

**அன்னாரின் ஆத்மா சாந்தியடைவதாக**

சி. தியாகராசா
***இளைப்பாறிய ஆசிரியர், சரவணை.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீவகத்தின் ஒளி விளக்கு

தீவுப் பகுதியிலே பெரும் புகழுடனும் பழம் பெருமையுடனும் வாழ்ந்த தலைசிறந்த குடும்பத்திற் தோன்றி அல்லைப்பிட்டிக் கிராமத்தின் உடையாராகி, வேலணை கிழக்கிலே பேராற்றலும் பெரும் புகழும் பெற்ற திருவாளர் ஐயம்பிள்ளை விதானையாரின் தலைசிறந்த தலைமைகளைத் துணைவியாக்கி இடத்துக்கும் காலத்துக்கும் மக்களுக்கும் ஏற்கப் பேசியும் மக்களின் குணமறிந்து எல்லாருடனும் அன்பாகப் பழகியும் நீண்டகாலம் உடையாராக மதிக்கத்தக்க வகையில் தனது கடமையைச் சரிவரச் செய்தும் வாழையடி வாழையாகத் தனக்குப் பின் தலைமகனைத் தலைமைக்காரனாயும் அல்லைப்பிட்டிக் கிராம சபையின் முதற் தலைவராயும் இருப்பதையறிந்து தனது இறுதிக் காலம் வரை பெருமகிழ்வுடன் வாழ்ந்தும், தீவுப் பகுதியின் உடையாராக இருந்தவர்கள் அனைவரும் மறைந்த பின்னரும் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்து உடையார் வேலையின் ஞாபகச் சின்னமாக எம் சிறார்க்குக் காட்சியளித்தும் சிறப்பாக அல்லைப்பிட்டிக்கும் பொதுவாகத் தீவகத்திற்கும் ஒளிவிளக்காகவும் கிராம மக்களுக்கும் உற்றார் உறவினர் அனைவருக்கும் வேண்டிய போது வேண்டிய உதவிகளைச் செய்து பெருமையுடனும் பெரும்புகழுடனும் நீடித்த காலம் வாழ்ந்தும் வந்தார்.

தீவுப் பகுதியிலே பெரும்புகழுடனும் பெருமையுடனும் விளங்கும் ஒரு சில குடும்பங்களில் அல்லைப்பிட்டி உடையார் குடும்பமும் ஒன்றாக விளங்க வைத்தும் இயற்கைப் பெரும் பேறெய்தியவர் எமது செல்லத்துரை உடையார் அவர்களே.

"அல்லைப்பிட்டி உடையார்" என்ற பெயர் என்றும் எல்லார் மனதிலும் ஞாபகமாக இருப்பதற்கு அவரைப் பின்பற்றி அவரது பண்பாட்டுடன் வாழ்வதே நாம் அவரது ஆன்மா சாந்தியடையச் செய்யும் முதற் கடமையாகும்.

கு. சிவரெத்தினம்
*வேலணை*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க. கைலாசபிள்ளை

*மண்டைதீவு*

யாழ்ப்பாணம் தீவுப்பகுதியைச் சேர்ந்த அல்லைப்பிட்டிக் கிராமத்தில் வேளாண் பெருங்குடி மக்களின் தலையாய பரம்பரையில் பெரியார் வைத்திலிங்கம் செல்லத்துரை அல்லைப்பிட்டி வினாசித்தம்பி வைத்திலிங்கத்தின் ஒரேயொரு மகவாய் 1882ம் ஆண்டளவில் தோன்றினாரென அறிகிறேன். பிரித்தானிய ஆட்சிக் காலத்தில் அவரை அல்லைப்பிட்டி, மண்கும்பான் கிராமங்களுக்கு விதானையாரென அழைக்கப்படும் தலைமைக்காரனாக நியமித்தது அப்போதைய அரசு. அந்நாட்களில் வேலணை கிழக்கு விதானையாராயிருந்த அம்பலவாணர் ஐயம்பிள்ளையின் சிரேஷ்ட புதல்வி சொர்ணம்மாளை விவாகம் செய்து செல்வச் செழிப்புடன் வாழ்ந்து வந்தார்.

1913ம் ஆண்டு மண்டைதீவு, அல்லைப்பிட்டி, மண்கும்பான் ஆகிய கிராமங்களுக்கு உடையாரென அழைக்கப்படும் ஓர் பிரதான தலைமைக்காரனாக நியமிக்கப்பட்டுச் சில குறிப்பிட்ட கடமைகளைத் திறமையுடன் ஆற்றிவந்தார். உடையார் பதவியிலிருந்து இளைப்பாறியவுடன் சடுதி மரண விசாரணை அதிகாரியாகவும், வெலியாத்து உத்தியோகஸ்தராகவும், விவாகப் பதிவு, பிறப்பு இறப்பு பதிவாளராகவும் கடமையாற்றி வந்துள்ளார். தெய்வ பக்தி ஆலய பரிபாலனத்துவம் இவற்றில் அக்கறை பூண்டு ஆலயங்களை நிர்வகித்து வந்தார். இவரது குடும்பம் விருந்தோம்பலுக்கும் சமாதானத்திற்கும் உறைவிடமெனக் கருதப்பட்டனர்.

இவருடைய மறைவு தீவுப்பகுதி மக்களுக்கும் பரந்துகிடக்கும் இனசனங்களுக்கும் பெரும் பேரிழப்பாகும். இவருடைய ஆன்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைந்தும் மறையாத
# வைத்திலிங்கம் செல்லத்துரை

தண்டனை விரிந்த மண்டைதீவு அடக்கிய அல்லைப்பிட்டிக் கிராமத்திற்குப் பல ஆண்டுகளாக உடையாராகவிருந்த வை. செல்லத்துரை அவர்கள் தனது செயற்திறன், சிறந்த சேவை. சீரிய பண்பு, சமயப் பணி, தமிழ்ப்பற்று, இனப்பற்று, தளராவுறுதி, தர்மகுணசீலம் ஆகியவற்றாலும், அரசாங்கத்தாலும், கிராம மக்களாலும் நன்மதிப்பைப் பெற்றார்.

ஒரு மனிதன் இச்சிறப்பியல்புகளை அடைவதற்கு தகுந்த துணையில்லாமல் அடைய முடியாது. இப்பெரியாருக்குத் துணைவியாக, வேலணை கிழக்கு பழம்பெரும் குடும்பத்தைச் சேர்ந்த அக்கிராமாதிபதி வழித்தோன்றலாகிய அம்பலவாணர் ஐயம்பிள்ளை விதானையாரின் சிரேஷ்ட புத்திரியை மணந்ததிலேயே உடையார் அவர்களுக்குத் தனிப் பெருமை உண்டு. விதானையாரின் மகள், சொர்ணம்மா, உடையாருக்குத் தக்க மனைவியாக, குடும்பம் சீரும் சிறப்புமாக வாழ வழிவகுத்தார்.

அமரர் தம் வாழ்நாளில் நாட்டின் நலன் கருதி யாழ்ப்பாணத்திற்கும் தீவுப் பகுதிக்கும் போக்குவரத்து வசதியை உண்டாக்க அக்காலத்தில் தீவுப் பகுதியாகிப் பிரதிநிதியாக இருக்க சேர் வை. துரைசாமி அவர்களினதும், தீவுப்பகுதி மணியகாரன் மு. சோமசுந்தரத்தினதும் ஆலோசனைக்கு முரணாக அராவிப் பாலம் அமைக்காமல் பண்ணைப் பாலத்தையே அமைக்க வேண்டும் என்று வாதாடி வெற்றியும் ஈட்டியுள்ளார்.

அவர் தம் வீட்டிற்கு யார் போனாலும் பசியுடன் திரும்பவிட மாட்டார்கள். அவரும் அவர்தம் மனைவியும் தரும சிந்தனையுடன் எல்லோரையும் வரவேற்று உணவு கொடுத்தனுப்புவதே பெரும் பணியாக இருந்தார்கள். கிராமத்தின் பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் அவருக்கு அவரே இணை என்றாலும் அவர்தம் துணைவியார் தனது தந்தை ஐயம்பிள்ளை விதானையாரின் நுண்ணிய அறிவைப் பெற்றுள்ளபடியால் உடையார் அவர்களுக்குப் பக்கபலமாய் இருப்பதுண்டு. கிராம மக்களின் பல்வேறு பிரச்சினைகளுக்கு உடையார் தம் மனைவியே தீர்வு கண்டதுண்டு என்றால் அவர்கள் தம் பெருமை கூறவும் வேண்டுமோ?

அன்னாரின் ஆன்மா சாந்தியடைய வேண்டுகின்றேன்.

திரு. க. சதாசிவம்

*முன்னாள் கிராமசங்கத் தலைவர்*

*வேலணை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியும் அனுதாபமும்

உடைமைகளுக்கெல்லாம் உடையவராகி ஈய்தலின் சிறப்பை உணர்ந்த உடையார் ஐயா அவர்களின் மறைவால் மனம் மிக வருந்துகின்றேன். குறையாத உளத்தையும் வரையாது வளங்கும் மனப்பான்மையும் கொண்ட இப்பெரியார் எட்டுணை காணிகளை ஏழைகளுக்கு எந்த எண்ணரிய தொண்டன். எண்ணரிய காணிகளை கன்னியற்கு தானஞ் செய்து கன்னியரை வாழவைத்த பெருந்தகை.

அவரின் சிந்தனையின் செழிப்பு கொடையின் வனப்பு இவற்றால் எத்தனை ஏழைகளின் வயிறு குளிர்ந்திருக்கும். "போதும்" என்று கூறுவது உணவை மாத்திரந்தானே என்று அவர் அடிக்கடி கூறுவதிலிருந்து அவரது உள்ளக்கிடக்கை நன்கு புலனாகிறது.

பண்ணைப் பாலம் அமைக்காத அந்த நேரத்தில் புங்குடுதீவு தொடக்கம் தீவுப் பகுதியின் மற்றைய கிராமங்களிலும் இருந்து யாழ்ப்பாணப் பட்டினம் செல்வோர் தமது கிராமங்களிலிருந்து கால் நடையாக வந்து அல்லைப்பிட்டி உடையார் வீட்டில் உணவு உண்டு பசியாறி அடுத்தநாட் காலையில் வள்ளம் ஏறி யாழ்ப்பாணப் பட்டினம் செல்வது வழக்கம். சொல்லப் போனால் உடையார் ஐயா ஒரு தர்ம தேவதை. அவர்தம் வழியை அவரின் நன்மக்கள் பின்பற்றி வாழ்வதே அவரின் ஆன்மா சாந்தியடையச் செய்யும் வழியாகும்.

**வாரி வாரி வழங்குவோரை வள்ளல் என்று சொல்லுவர்**
**மாரிபோல வழங்குவோரை மக்கள் என்றும் போற்றுவர்**

திரு. வ. யுவக்கீம்பிள்ளை (அப்புத்துரை)
*மண்டைதீவு*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எனக்குத் தெரிந்த உடையார் அவர்கள்

“உடைமையுளின்மை விருந்தோம்பல் ஓம்பா மடைமை” என்பார் வள்ளுவர். இந்த வாழ்க்கைக்கு எடுத்துக்காட்டாக விளங்கியவர் காலஞ்சென்ற வைத்திலிங்கம் செல்லத்துரை உடையார் அவர்கள். விருந்தோம்பலைக் கடைப்பிடியாத ஒருவருக்கு எத்தனை செல்வம் இருந்தாலும் அது உள்ளதாகக் கருதப்படமாட்டாது என்பது வள்ளுவர் கருத்து. உடையார் அவர்கள் தாம் சாப்பிடும் நேரத்தில் தம் வீட்டில் வந்திருப்பவரை - அவர் அடுத்த வீட்டுக்காரனாக இருந்தாலும் சரியே - சாப்பிட வைக்காமல் விடமாட்டார். இதைக்கொண்டு ஏனையோர் விடயத்தில் எப்படியிருப்பார் எனக் கூறவும் வேண்டுமோ. “சான்றோர் சென்ற நெறி” என சங்க பாடல் மூலம் நாம் அறிகிறோமே. அந்த வழியைப் பின்பற்றித்தான் தாமும் தம் வாழ்க்கையை அமைத்துக் கொண்டார். அவர் முன்னோர்க்கும் இந்தப் பண்பு இருந்தது.

நற்கல்வியால் ஒருவருக்கு கிடைக்க வேண்டிய உள்ளத் தூய்மை அவருக்கு இயல்பாகவே வாய்த்திருந்தது. இன்று கல்விமான்கள் என்று கூறுப்படுவோரில் பெரும்பாலோரிடம் காணப்படும் சொல்லொன்றும் செயல் ஒன்றுமான வஞ்சகப் போக்கும் நாட்டுக்கோ, சமூகத்திற்கோ ஆகாத நச்சுத்தனம் அவரிடம் கிடையாது. “உடையார் அவர்கள் சம்பளத்திற்கு வேலை பார்த்தார்” என்று எந்த அறிவிலியுமே கூறமாட்டான். அவர் வீட்டிற்கு வருவோருக்கு அவர் கொடுக்கும் சுருட்டிற்கே அவர் பெற்ற சம்பளம் போதாது. எந்த சிக்கலான பிரச்சினையையும் அவர் கோட்டிற்கு எந்த விடர்கண்டனையும் வழிக்குக் கொண்டுவரக்கூடிய திறமை அவரிடம் இருந்தது. இதனால் ஏழை மக்கள் கோட்டிற்கு கொட்டி ஓடாகப் போக விடாமல் பாதுகாத்தார் என்பதை எவருமே மறக்க முடியாது.

தன்னிடம் தொழில் செய்த எந்த ஒரு உழைப்பாளியையும் சுரண்டினார் என்றோ, அவன் சுதந்திரத்தின் மேலாதிக்கம் செலுத்தினாரென்றோ உடையார் அவர்களைச் சொல்வதற்கில்லை. மாறாக கதியற்ற நிலையில் அவரை அண்டியோர் அனைவரும் இன்று தம் காலில் மிக உறுதியாக நிற்குமளவிற்கு வளர்ந்து வந்ததை - வளர்வதை நாம் காண்கின்றோம்.

**அன்னாரின் ஆத்மா சாந்தியடைவதாக.**

**க. வ. ஆறுமுகம்**
***அல்லைப்பிட்டி***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைந்தும் மறையாத என் அண்ணர்

செந்தமிழ் வழங்கும் யாழ்ப்பாண நகரிற்கு அண்மையிலிருக்கும் தீவுப் பகுதியைச் சேர்ந்த அல்லைப்பிட்டி என்னும் கிராமம் தனிச்சிறப்பு வாய்ந்த ஓர் இடமாகும். பழமை வாய்ந்த ஆலயங்களும் இலக்கிய வரலாற்றுப் பெருமைகளை எடுத்துக்காட்டும் பலசிறப்பு வாய்ந்த சின்னங்களும் அங்கே உண்டு என்று சொல்லப்படுகின்றது. மருதமும் முல்லையும் நெய்தலும் கலந்து நின்று அணி செய்யும் அழகிய இடமாம்.

உயர்ந்த வேளாண் குலத்திற்கு உதித்த ஒரே மைந்தன் தான் என்பதை உணர்ந்து தருமம் தன் வழிச் செய்கை என்று அல்லும் பகலும் அயராது உழைத்த இப்பெரியாருக்கு பெற்றோரிட்ட "செல்லத்துரை" என்ற பெயரை பலர் அறியார். அல்லைப்பிட்டி உடையார் என்றால் தான் முழுநாடும் அறியும். சந்தனப் பொட்டும், நிமிர்ந்த நடையும், நேர்கொண்ட பார்வையும் பொலிந்த முகமும் பூரித்த உள்ளமும், நிலத்தினில் யாருக்கும் அஞ்சிடா நெறிகளும், எண்ணியதை எண்ணியாங்கு முடிக்கும் திண்ணிய ஆற்றலும், திருவும், தீர்வும் வீரமும், வெற்றியும் என்றும் தன்பால் விளங்க வாழ்ந்த இப்பெரியார் தனது வாழ்க்கைத் துணையாக காலம் சென்ற வேலணை கிழக்கு விதானையார் ஐயம்பிள்ளை அவர்களின் சிரேஷ்ட புத்திரி சொர்ணம்மா அவர்களைத் தேர்ந்தெடுத்தார்கள்.

அவ்வம்மையாரும் தற்காத்துத் தற்கொண்டார். பேணித் தகைசான்ற சொற்காத்து சோர்விலாளாய் இல்லறம் இனிது நடாத்தி வந்தார்கள். அல்லைப் பிட்டி உடையாருடன் நான் பல காலமாக உத்தியோகங்கள் காரணமாக நெருங்கிப் பழக வேண்டியிருந்தது. அப்பொழுது அவரின் அருள், ஈகை, இரக்கம், இன்சொல், தொழிற் பண்புகள், சுற்றம் தழுவல் அயலூர் பேணல், விருந்தினர் போற்றல், இவர் வாழ்வில் இலட்சியங்கள். மேலும் மாசறு உள்ளம். மலர்ந்த நோக்கு ஈசனடி மறவா எழிற்சிந்தை இவரை நினைவுபடுத்தும் மகத் தான சின்னங்களென நான் அறியக் கூடியதாயிருந்தது. இத்தகைய சிறப்பெல் லாம் ஒருங்கமைந்த என் அண்ணர் கடந்த *03.10.1977* ல் சித்தமலம் அறிவித்துச் சிவமாக்கி எனையாழும் அத்தன் பாதம் சேர்ந்தார். சிவம் சிவமானார்.

அல்லைப்பிட்டி கோவிற் பற்று கிராம மக்கள் பிதா என மதிப்புக் கொடுத்த இப்பெரியாரின் மறைவு குறித்து துயருறும் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், இனத்தவர்கள், ஊரவர்கள் ஆகியோர்களுக்கு எனது சார்பாகவும் மண்டைதீவு மக்கள் சார்பாகவும் என உளம் கலங்கும் ஆழ்ந்த ஆனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன். எல்லோருக்கும் இனியவரான என் அண்ணர் அல்லைப்பிட்டி உடையார் திரு. வை. செல்லத்துரை அவர்களின் ஆன்மா சாந்தியடைவதாக.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி

மு. நவரட்னராசா – மண்டைதீவு
***இளைப்பாறிய கிராமத் தலைமைக்காரன்***
***முன்னைநாள் இணக்கசபைத் தலைவர்***
***தற்போதைய தேசிய வீடமைப்பு விலைமதிப்பாளர்***


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தனித்துவம் வாய்ந்த உடையார்

தனித்துவம் என்பது சமம் உயர்வு இரண்டும் இல்லாத தன்மை, மேலாய தன்மை. தீவுப் பகுதியிலே உடையார்மாராய் உத்தியோகம் வகித்தவர்கள் யாவரும் மறைய தான் ஒருவராய் இன்ற தனது தொண்ணூறாவது வயது வரை எம்முடன் வாழ்ந்து வந்தவர் அல்லைப்பிட்டி வாசர் உயர்திரு வைத்திலிங்கம் செல்லத்துரை அவர்கள். அல்லைப்பிட்டி, மண்கும்பான், மண்டைதீவு ஆகிய கிராமங்களுக்கு உடையாராக இருந்தவர்.

இவர் 02.09.1887 குடும்பத்தில் ஏக புதல்வராய் பிறந்து 29வது வயதில் அல்லைப்பிட்டி பொலிஸ் விதானையாராக நியமனம் பெற்று, பின்னர் 1913ம் ஆண்டில் உடையாராக நியமிக்கப் பெற்றார். உடையார் வேலை ஒழிப்புத் திட்டத்தின் பின் 1941ம் ஆண்டு முதலாக மேலும் 15 ஆண்டுகள் வரை விவாகம் பிறப்பு இறப்பு பதிவாளராகவும் வெலியாத்து உத்தியோகஸ்தராகவும் சடுதி மரண விசாரணையாளராகவும் கடமை புரிந்தவர். மரண விசாரணை அதிகாரம் உடையார் வேலையோடும் இணைந்திருந்தது. இவரது அரசாங்க பதவிகளான விதானை வேலையும் உடையார் வேலையும் தீவுப் பகுதிக்கு மணியகாரனாக இருந்த திரு. வி. முத்தையாபிள்ளை காலத்தில் கிடைக்கப் பெற்றன. உடையார் செல்லத்துரை அவர்களில் அவரும் அவரது மகன் சோமசுந்தர மணியகாரன் அவர்களும் பெருமதிப்பு வைத்திருந்தார்கள்.

உடையார் செல்லத்துரை அவர்கள் கல்வி, அறிவு, நல்லொழுக்கம், மானம், சமூக வேலை, தருமம், ஆலயப்பணி, ஆலய முகாமைத்துவம் பரிபாலனம் முதலாய நற்குண நற்செய்கைகள் உள்ளவர். நிறைந்த காணிவளம் பெற்றவர். மறுவில்லாத உயர்ந்த வேளாண் குலத்தினர். பக்கத்தில் முருகன் ஆலயத்தில் நித்திய பூசை இவரே செய்வித்தார். மண்டைதீவு சிறுப்புலம் முத்துக்குமாரசாமி கோயில் தர்ம பரிபாலகர்களில் உடையாரும் ஒருவர். அஞ்சாமை, ஈகை முதலிய பண்புகளோடு பிறர்க்கு தலைகுனியாத இயல்பும் பொருந்தியவர் எமது உடையார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவாளர் செல்லத்துரை உடையார் வேலணையிலே பரம்பரையாக விதானை உத்தியோகம் பார்த்த மகனாகிய ஐயம்பிள்ளை அவர்களது சிரேஷ்ட புதல்வி சொர்ணம்மாவை மணம் செய்து மூன்று புதல்வர்களையும் மூன்று புதல்வியர்களையும் பெற்று, தம் முன்னோர்கள் தொடர்ந்து ஒவ்வொரு மகப்பேறு பொருந்திவர, தான் நிறைந்த சந்தானவிருத்தியும்பல பவுத்திரப்பேறும் கண்டு சுகதேகியாக நிறைவாழ்வு பெற்று மக்கள் மருமக்கள் பொருள் வளம், தொழில் வளம் எல்லாம் பெற்று வாழ்வது கண்டு அகமலர்வும் முகமலர்வும் பூண்டிருந்தார்.

தனது அருமைப் பாரியார் நீங்கியபின் தனித்துவம் குன்றாமல் வாழ்ந்த உடையார் அவர்களுக்கு 03.10.77ல் அழைப்பு வந்து விட்டது. தீர்க்காயுள் பெற்று வாழ்ந்த உடையார் அவர்களின் ஆன்மா பேரா இன்பப் பெரும் பேறெய்தும் என்பதில் சந்தேகம் இல்லை.

உடையார் அவர்களின் பண்புகளையும் தரும கைங்கரியங்களையும் மக்கள் பின்பற்றி மேலோங்கத் திருவருளை வேண்டுகின்றேன்.

**ஸ்ரீமத் ச. மகாலிங்கம் J. P.**

***வேலணை மேற்கு சைவத் தமிழறிஞர்***

***முன்னாள் கிராம விதானையார்***





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்திலிங்கம் செல்லத்துரை உடையார் அவர்கள் தமது தொண்ணூற்றொராவது வயதில் இவ்வுலக வாழ்வை நீத்து மறுமை இன்பத்தை நுகர்வதற்காக எம்மை விட்டுச் சென்று விட்டார். அவர் எம்மை விட்டுச் சென்று இன்று முப்பத்தொரு நாளானாலும் உண்மையில் அவர் எம்மோடு உடன் இருப்பது போல்தான் தோன்றுகிறது.

அமரர் செல்லத்துரை அவர்களை நாம் பெரியாராகவே மதிக்கின்றோம், போற்றுகின்றோம். அவர் எம்மோடு பழகும் விதம் அவர்க்கென்றே ஒரு தனிச்சிறப்பு வாய்ந்தது. அவரிடத்தே எச்சந்தர்ப்பத்திலும் நாம் இனிய சொல்லையே காணக்கூடியதாக இருந்தது. மனிதனாகப் பிறந்தவரிடத்தே பல்வேறு குண இயல்புகளை நாம் நேரத்துக்கு நேரம் காணலாம். வேண்டத் தகாத குண இயல்புகளைக் களைந்து வேண்டியவற்றை தமக்கென்ற பாணியில் அமைத்துப் பெருமை பெற்றவர் காலஞ்சென்ற திரு. செல்லத்துரையாகும்.

திரு. செல்லத்துரை அவர்கள் ஆற்றிய பணியே உடையார் என்று வழங்கப்படும் அரசபணியேயாகும். அரசபணியை ஆற்றுபவரிடம் காணப்படும் அதிகாரத் தொனியை நாம் அவரிடம் காணமுடியாது. அதற்கெதிராக அவரிடம் அன்பிருந்தது, பாசம் இருந்தது. கனிவு இருந்தது. 'அன்பிற்கு முண்டோ அடைக்கும் தாள்" என்ற மணிவாசகர் மணிவாக்கை வேதமாகக் கொண்டாரோ என்று எம்மை எண்ணத் தோற்றுவிக்கிறது. அந்தளவிற்கு எவரிடமாவது எப்பிரச்சினையைப் பேசும் போதும் அன்பால் அடிமைப்படுத்தி தனது விநியோகத்தால் பிரச்சினையை விரைவில் தீர்த்து விடும் திறமை அவருக்குரிய தனிச் சிறப்பாகும். அமரர் அவர்கள் விவாக இறப்புப் பிறப்புப் பிதிவாளராகக் கடமையாற்றினார். வெலியாத்து உத்தியோகத்தராகவும் தனது கடமையை நிறைவேற்றினார். அது மாத்திரமல்ல சடுதி மரண விசாரணை அதிகாரியாகவும் கடமையாற்றி வந்தார். அவரிடத்திலுள்ள தனித் திறமைதான் அவரை இப்பதவிகள் தேடிவந்தன. பதவிகள் அவரைத் தேடி வந்தனவே தவிர அவர் பதவியைத் தேடிச் செல்லாத பெருமை அவருக்கே உண்டு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லைப்பிட்டி மண்கும்பான் கிராம மக்கள் பெரும் செல்வந்தராக இல்லாத அக்காலம். அக்காலத்தில் குடும்பச் சச்சரவு என்றால் என்ன, எல்லைத் தகராறு என்றால் என்ன, வல்லடி வழக்கு என்றால் என்ன, உடையார் தலையிட்டால் தான் தீரும் என்பது ஊர் மக்கள் கருத்து. இதிலிருந்து அவர் எமது கிராம மக்களுக்கு ஆற்றிய சேவை அளவிடற்கரியது என்பதை நாம் உணரமுடிகிறது.

உடையாரின் உள்ளம் தூய்மையாக இருந்தது. உடல் தூய்மையாக இருந்தது. உடை வெண்ணிறமாக இருந்தது. சைவப் பண்பு இருந்தது. அவரிடம் காணப்பட்ட பண்புகள் அனைத்தும் எமக்கு வழிகாட்டியாக அமைந்துள்ளது. அவர் ஆற்றிய சேவைகளுக்காக நாம் நன்றியைச் செலுத்துகின்றோம். அவர் முத்தி இன்பம் அடைவதற்காக நாம் அவருக்கு அஞ்சலி செலுத்துகின்றோம்.

**வாழ்க அவர் நாமம்.**

வை. குணரெத்தினம் ***B. Ed.*** ஆசிரியர்

***மண்கும்பான்.***





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமசேவை உத்தியோகத்தர் அலுவலகம்

***கொக்குவில் மேற்கு.***

**26.10.77**

'போக்கும் அரவும் புணர்ந்தில்லாப் புண்ணியன்' இறைவன் ஒருவனே, அவனுடைய பிள்ளைகள் போவார்கள்; வருவார்கள்; இது இயற்கை நியதி.

வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்தவன் இங்கிருந்து போனாலும், அவன் நினைவு போவதில்லை. அத்தகைய ஒருவரே அல்லைப்பிட்டியின் இளைப்பாறிய உடையார் திரு. வைத்திலிங்கம் செல்லத்துரை ஐயா அவர்கள்.

நான் அப்பொழுது அல்லைப்பிட்டிக் கிராம சேவையாளராகக் கடமையாற்றினேன். ஊருக்குப் புதியவராகிய எம்மை என்றும் வரவேற்கும் இனிய மனிதராக இருந்தார் இனியார் செல்லத்துரை. பழகியவரைப் பாசத்தால் பிணித்துவிடும் பண்பாளராக இருந்த உடையாரையும் அவர் குடும்பத்தாரையும் நாம் என்றுமே மறந்துவிட முடியாது.

எனது கடமையைப் புரிவதற்கும் உடையார் ஐயா உறுதுணையாய் இருந்தார்கள் என்பதை நான் நன்றியோடு குறிப்பிட்டே ஆகவேண்டும். அல்லைப்பிட்டிக் காணிகளுக்கு எல்லை இல்லாவிட்டாலும் என்ன? உடையார் சொல்லுத்தான் எல்லை. நல்ல மனிதனின் சொல்லே எல்லோரும் ஏற்கக்கூடிய எல்லை. யாருக்கும் பாதகமில்லாத வகையில் காணிகளின் வரலாற்றையும் கூறி, தகராறுகளைத் தீர்ப்பதற்கு உதவி புரிவார் எங்கள் உடையார் ஐயா. அவரின் பிரிவால் வருந்தும் அவர் குடும்பத்தாருக்கு நமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

க. கந்தசாமி

***கிராமசேவை உத்தியோகத்தர்***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அல்லைப்பிட்டி உடையார்

முந்தநாள் தான் வந்தான்; நேற்றிங்கே வாழ்ந்திருந்தான்
இந்தநாள் எங்கே அவன் என்பார் - சந்தமும்
நில்லாது செல்லும் நிலவுக வாழ்க்கை இது
செல்லாது நிற்பார் சிலர்

செல்லத்துரை உடையார் சென்றாரே என்கின்ற
சொல்லைச் சுமந்து தமிழ் அழுதாள் - அல்லையூர்
மக்கள் அழுதார்; அவர்நன் மக்கள் அழுதார்
தக்காரின் சோகம் தனி.

பதவி பல, உடையார், என்றாலும் நம் உடையார்
உதவி பல உடையார் ஊருக்கே - பதமையுடன்
சின்னவரைக் கண்டாலும் ஐயா சிரிக்கின்றார்
'என்னடா மோனை' என.

பொன் உடையார், நல்ல புகழ் உடையார் நன்மக்கள்
என்னும் திருவும் இனிது உடையார் - மன்னுபுகழ்ச்
செல்வத்துரை உடையார் சென்றாலும் என்றும் அவர்
அல்லைப்பிட்டி, உடையார் ஆம்.

அல்லைப்பிட்டி இளைப்பாறிய உடையார்

**வைத்திலிங்கம் செல்லத்துரை அவர்களின்**

**மறைவு குறித்து**


அல்லைப்பிட்டிக் கவிஞர் பா. சத்தியசீலன்

**யாத்த இரங்கற் பாக்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி



தந்தை வழி
விநாசித்தம்பி
வைத்திலிங்கம் + சின்னத்தங்கம்
செல்லத்துரை + சொர்ணம்மா
(உடையார் அல்லைப்பிட்டி - அமரரின் தந்தையார்)
தவவிநாயகம் + கிருஷ்ணாம்பாள்
தையல்நாயகி + ஞானசம்பந்தன்
வேலாயுதப்பிள்ளை + இராசம்மா
சிவயோகலட்சுமி + இரத்தினசபாபதி
நடேஸ்வரி + சச்சிதானந்தன்
நடேசபிள்ளை + மங்கையற்கரசி
சொர்ணம்மா
கிருபாலினி + இந்திரஜித்
சந்திரகுமார் + தயாநாயகி
ஆரியகுமார் + பரமேஸ்வரி
தவபாலினி + சிவனேசராஜா
ஜெயபாலினி + ரவீந்திரன்
குணபாலினி + ஜெயசீலன்
உருத்திரகுமார் + கஜவல்லி
சத்தியபாலினி + சிவானந்தன்
ஜெயசுந்தரராஜா + இரட்ணமணி
சிறிஸ்கந்தராஜா + றாபாவதி
சியாமளா + குலேந்திரா
மஞ்சுளா + மகாலிங்கம்
சோமேஸ்வரி + ராஜ்குமார்
லோகேந்திரா + நாகேஸ்வரி
தெய்வேந்திரா
விஜயேந்திரா + கவிதா
கேதீஸ்வரநாதன் + பபா
கௌரிநாயகி + சேனாதிராஜா
சொர்ணநாயகி + தேவநாதன்
ஸ்ரீரங்கநாயகி + ஜெயகோபால்
யோகநாதன் + பரமேஸ்வரி
பிரபாகரன் + சுகந்தி
பவானி + சிறிதரன்
சிவானந்தன் + சத்தியபாலினி
கஜவல்லி + உருத்திரகுமார்
கஜந்தினி + பிரபாகர்
சுதாஜினி + சிவகுமார்
துஷ்யந்தன் + சங்கீதா
கஜநேசன் + சியாமலா
கமலினி + விஜய்
பிரியதர்சினி
தாய் வழி
ஐயம்பிள்ளை + நாகபூரணி
(வேலணை விதானையார்)
இராசம்மா + அமிர்தலிங்கம்
கமலாம்பிகை + நரசிங்கம்
நகுலாம்பிகை + கனகரெத்தினம்
தவமணி + வீரகத்திப்பிள்ளை
சாரதாம்பாள் + கணபதிப்பிள்ளை
லீலாவதி + தனபாலசிங்கம்
அருளாவதி
ஆறுமுகம்
சிவானந்தன்
குகன்தேவி + நாகராஜா
ஜெயலட்சுமி

# அமரரின் மனைவி வழி

இலங்கை நாயக முதலி (மண்டைதீவு)

குலநாயகமுதலி
ஐயம்பிள்ளை உடையார்
இலங்கையர்
சுப்பிரமணியர்
வேலாசியா

↓

பொன்னம்பலம்

↓

சிவகாமிப்பிள்ளை

- சிதம்பரநாதர் + சொர்னம்மா
- கார்த்திகேசு + செல்லம்மா
- பார்வதிப்பிள்ளை + செல்லத்தம்பி
- விசாலாட்சி + செல்லத்துரை
- விநாயகமூர்த்தி + நாகரெத்தினம்
- அப்பாப்பிள்ளை

விநாயகமூர்த்தி + நாகரெத்தினம்:

- கந்தையா (சிறாப்பர்) + பரமேஸ்வரி
- இரத்தினசபாபதி + சிவயோகலட்சுமி
- இராசம்மா + வேலாயுதப்பிள்ளை
- செல்லலட்சுமி + இராமநாதன்
- புவனேஸ்வரி + சிவரெத்தினம்
- சுயம்புலிங்கம் + ஜெயசிறி
- மங்கையர்க்கரசி + நடேசபிள்ளை

கந்தையா + பரமேஸ்வரி:

- இராஜேஸ்வரன் + மேகலை
  - திவ்யா
  - ரதிகேசன்,
  - கேசவன்
- இராஜேஸ்வரன் + மங்களகௌரி
  - திருக்குமாரன்
  - செந்தூரன் + மகிந்துஷா
  - அரசி + முரளிதாசன் → சஜீவன், லக்சனா, யகீதன்
  - தீபன் + பிரதீபா → நர்மிதா
  - கலை ஆனந்தி + யோகேந்திரன்
- ஜெகதீஸ்வரன் + உத்தமிப்பிள்ளை
  - சொருபானந்தி
  - சோபானந்தி
  - தினேசன்
  - சிவானந்தி
- பரமேஸ்வரன் + இராஜேஸ்வரி
  - அம்சவர்த்தனன்
  - அதீதப்பிரியா
- கணேஸ்வரன் + சிவகுமாரி
  - கார்தீபன்
  - ஷாலினி
  - மர்த்துனன்

புவனேஸ்வரி + சிவரெத்தினம்:

- சிவகுமார் + உதயகுமாரி
  - பிரதீஸ்
  - பிரீத்தி
  - பிரதாப்
- சுகந்தி + பிரபாகரன்
  - அபிநயா
  - சாருஷன்
  - அதீஸ்
  - சாருஷா
  - மதுஷன்
- பிரியந்தி + இளங்கோவன்
  - றோகித்
  - றோஷிக்கா
  - றோசிகா

விநாயகமூர்த்தி + நாகரெத்தினம்


↓

திருநாவுக்கரசு + பராசக்தி

- விநாயகமூர்த்தி + கோமளவள்ளி
  - சலஷா + சநுக்சு → சசிகாந், லக்சுமிஸ்ரீ
  - பாலலோஜனன்
  - சலோஜனன் + அருலேஸ்வரி → விமோஷன்
  - வேஜஷா + ப்ரணவன்
- சத்தியமூர்த்தி
- லோகேஸ்வரி + ரகுநாதன்
  - லம்போதரன்
  - சிந்துஜன்
- லோகநாதன் + அரங்கநாயகி
  - ராகவன்
  - ராகுலன்
  - நிரோசன்
- ரகுநாதன் + கீதா
  - கோசிகா
  - தனுசிகா
  - சரணியா
  - சரண்
- கேதாரநாதன் + அனுஷா
  - ராகினி
  - வினோதினி
- பஞ்சாட்சரநாதன் + கலைவாணி
  - கௌசிகன்
  - காரணன்
  - கஜசரவணன்
- விக்கேஸ்வரி + இளஞ்செழியன்
  - கஜனி
  - பாலகஜன்
  - கௌசிகி
- நாகேஸ்வரி + லோகேந்திரா
  - சாங்கவி
  - சஜீதன்
  - சங்கவை
- ஜெகநாதன் + நகுலேஸ்வரி
  - சிவசங்கரி
  - ஆதித்தியன்
  - சிவனியா
- ஜெகதீஸ்வரி + பிரபாகரன்
  - ஹரணி
  - கபிலேஸ்
  - பவதாரணி
- செந்தில்நாதன் + விஜிதா
  - தாமிரா
  - அதர்விந்
  - ரனோசிகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org